வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 23.11.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 353 | பக்கங்கள் : 16




# மாவீரரை நினைவேந்த தடை கோரிய மனுக்கள் நீதிமன்றங்களால் நிராகரிப்பு

## மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறையில் பொலிஸாரின் விண்ணப்பங்கள் தள்ளுபடி

யாழ்ப்பாணம், நவம்பர் 23

**மாவீரர்களை நினைவேந்துவதற்கு தடை விதிக்குமாறு கோரி பொலிஸார் முன்வைத்த விண்ணப்பங்களை சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்து கட்டளையிட்டன.**

“விண்ணப்பங்களில் பிரதிவாதிகளால் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் குற்றவியல் நட வடிக்கை சட்டக் கோவை மற் றும் கோவிட்-19 தனிமைப் படுத்தல் சட்டங்களை மீறி செயல்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும். எனினும், குற்றமிழைக்கலாம் என்ற அடிப்படையில் தடை உத்தரவு கட்டளை வழங்கமுடியாது” என்று விண்ணப்பங்களை விசாரித்த நீதிவான் நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்தன.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற எல்லைக்குள் உள்ள இரண்டு பொலிஸ் நிலையங்கள், மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லைக்கு உட்பட்ட 8 பொலிஸ் நிலையங்கள், பருத்தித்துறை 15

## மூத்த தமிழ் பத்திரிகையாளர் கானமயில்நாதன் காலமானார்!



யாழ்ப்பாணம், நவ. 23

மூத்த பத்திரிகையாளர் ம. வ. கானமயில்நாதன் நேற்று திங்கட்கிழமை அதிகாலை யாழ்ப்பாணத்தில் அவரின் இல்லத்தில் காலமானார். வயது மூப்பு மற்றும் அதனால் ஏற்பட்ட தளர்வு காரணமாக உயிரிழந்த அவருக்கு வயது 79.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸை தளமாகக் கொண்டு இயங்கும் எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப் பின் உயர் விருது 2013ஆம் ஆண்டு 15

## வரவு - செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### கட்சி முடிவுக்கு மாறாக வாக்களித்த மு.கா. எம்.பிக்கள்

கொழும்பு. நவ. 23

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வாக்கெடுப்பை கோரியதனையடுத்து இலத்திரனியல் 15

## சகல கிராம சேவகர் பிரிவுக்கும் ஒரேயளவு நிதியே ஒதுக்கீடு!

### நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, நவ. 23.

“வடக்கிற்காக வரவு செலவில் எதுவும் இல்லை என்று வடக்கின் பிரதிநிதிகள் கூறியிருந்தனர். ஆனால் நாங்கள் முழு நாட்டையும் ஒரே நாடாகவே பார்க் கின்றோம். இதன்படி நாட்டிலுள்ள அனைத்து கிராம சேவக பிரிவுகளுக்கும் ஒரே அளவில் நிதியை ஒதுக்கியுள்ளோம். இதில் கட்சி, இனம், மத பேதமின்றி ஒரே அளவிலேயே வழங்கியுள்ளோம்” என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

## சீவல் தொழிலாளி வீழ்ந்து உயிரிழப்பு

வடமராட்சி, நவ. 23

பனையிலிருந்து தவறி வீழ்ந்து சீவல் தொழிலாளி உயிரிழந்தார்.

வடமராட்சி - உடுப்பிட்டி - இமையாணன் கிழக்கு ந. ஜெயராசா (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை சீவல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பனையிலிருந்து தவறி வீழ்ந்தார் எனக் கூறப்படுகின்றது.

வீழ்ந்தவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்து விட்டார் என அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித் 15

## மீண்டும் முப்பதைத் தாண்டியது நாளாந்த கொரோனா மரணம்

கொழும்பு, நவ. 23

நாட்டில் மேலும் 31 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்த 31 பேரில் 21 ஆண்களும், 10 பெண் 15

## இந்திய பிரதமர் மோடியை சந்திக்க விரைவில் டில்லி பறக்கிறார் பஸில்!

கொழும்பு, நவ. 23

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அடுத்த சில நாட்களில் டில்லி சென்று சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்த சந்திப்புக்கான ஏற்பாடுகளை கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் புதுடில்லியில் உள்ள இலங்கை தூதரகம் ஆகியன இணைந்து மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறினார்.

இச்சந்திப்பு எதிர்வரும் சில தினங்களில் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் நேற்று 15

## புதிய தேர்தல் சட்டமின்றி மாகாண தேர்தல் நடக்காது!

### அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்

கொழும்பு, நவ. 23

மாகாண சபை தேர்தல் முறைமை தொடர்பில் புதிய தேர்தல் சட்டம் இயற்றாமல் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாது. உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒரு வருட காலத்திற்கு பிற்போடும் 15

## புதிய அரசமைப்பு என்பது கானல்நீராகவே தெரிகிறது

### அரசின் பங்காளி கட்சி தலைவர்

கொழும்பு, நவ. 23

“புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது கானல்நீர் போல காட்சியளிக்கிறது. பல்லின சமூகம் வாழும் நாட்டில் அனைத்து இன மக்களின் அபிலாசைகளையும் உள்ளடக்கிய வகையில் குறுகிய காலத்தில் அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது சாத்தியமற்றதாகும். 15

## வடமராட்சியில் விபத்து இளைஞர் ஒருவர் மரணம்!

வடமராட்சி, நவ. 23

அதிவிரைவாக வந்த மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி - புலோலி - மந்திகை - 15



## மாவீரரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிமன்ற எல்லைக்குள் உள்ள 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப் பதிகாரிகளால் இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

குற்றவியல் நடவடிக்கை சட்டத்துக்கு அமைவாகவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின்படியும், நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியிருந்தனர்.

தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறி பொதுமக்களை அணிதிரட்ட முடியாது என்றும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்.

விண்ணப்பங்களின் பிரதிவாதிகளாக அரசியல் கட்சி பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மகன்கள் சிலர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த விண்ணப்பங்களின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. மாவீரர் நாள் நினைவேந்தலை அனுமதித்தால் பெரும் ஆபத்து என்று பொலிஸார் தமது சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் விண்ணப்பங்கள் அடிப்படையற்றவை என்றும் மன்று தள்ளுபடி செய்யவேண்டும் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிமன்றங்கள், குற்றவியல் நடவடிக்கை சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது என்று சுட்டிக்காட்டி விண்ணப்பங்களை நிராகரித்தன. (அ-ஐ)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

“எனது வரவு -செலவுத் திட்டம் பல்வேறு பகுதிகளை கொண்டுள்ளது. அதில் எங்களுக்கு உரிய சக்தி மற்றும் சவால்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளோம். அத்துடன், வரவு - செலவுகளுக்கு மேலதிகமாக சில கொள்கைத் திட்டங்களை முன்வைத்துள்ளோம். இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை எதிர்காலத்தில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை கூடி அரசாங்கமாகத் தீர்மானம் எடுப்போம்.

இதேவேளை, அரச சேவை சம்பள முரண்பாடு தொடர்பாக யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய சம்பள திட்டத்திற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்கள் முன்வைத்த யோசனைகளை சம்பள நிர்ணய ஆணைக் குழுவுக்கு முன்வைத்து நடவடிக்கை எடுப்போம். அத்துடன், சுகாதார துறையின் சம்பள திருத்தத்தையும் முன்வைக்க நடவடிக்கை எடுப்போம்.

அந்நிய செலாவணி தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது இடையூறாக இருப்பவற்றில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் விசேட செயலணி அமைக்கப்படும்.

இதேவேளை மரக்கறி, பழங்களின் உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைக்கும் தீர்வு காணப்படும். வரவு -செலவில் வடக்குக்கு எதுவும் இல்லை என்று வடக்கின் பிரதிநிதிகள் கூறியிருந்தனர். ஆனால், நாங்கள் முழு நாட்டையும் ஒரே நாடாகவே பார்க்கின்றோம். இதன்படி நாட்டிலுள்ள அனைத்து கிராம சேவக பிரிவுகளுக்கும் ஒரே அளவு நிதியை ஒதுக்கியுள்ளோம் - என்றார்.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சாரையடி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது.

இதில், அல்வாய் - அத்தாயைச் சேர்ந்த கண்ணன் காந்தன் (வயது -22) என்பவரே உயிரிழந்தார்.

பருத்தித்துறை பிரதான வீதியில், மந்திகை பக்கத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் பருத்தித்துறை பக்கத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியே விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மூவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், சேர்க்கப்பட்ட சிறிது நேரத்திலேயே இளைஞர் உயிரிழந்தார்.

மற்றைய இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து குறித்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ஐ-2)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது இந்தியாவில் உள்ள சில சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் நிதியமைச்சர் பேச்சு நடத்துவார் என்று அவர் கூறினார்.

இந்தியாவுடனான இலங்கை உறவு வலுவான நிலையில் உள்ளது. இலங்கைக்கு தேவை ஏற்படும் போது இந்தியா எப்போதும் உதவிகளை வழங்கி வருவதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த விஜயத்தின்போது நிதியமைச்சர் இந்தியாவிடமிருந்து கடன்களைப் பெற உத்தேசிக்கவில்லை எனவும் பீரிஷ் குறிப்பிட்டார். பதிலாக, இந்தியாவிடமிருந்து அதிக முதலீடுகளை நிதியமைச்சர் நாடுவார். அத்துடன், அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது குறித்தும் அவர் பேசுவார் எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறினார். (அ)

## வரவு-செலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட எம்.பி.யான இஷாக் ரஹ்மான், தேசியப் பட்டியல் எம்.பி.யான டயானா கமகே, மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ், பைசல் ஹாசிம், நசீர் அஹமட், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பியான அலிசப்ரி ரஹீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. யான முஷாரப், சுயேச்சையாக செயல்படும் எம்.பி.யான அத்துரலிய ரத்தன தேரர் ஆகியோர் வாக்களித்தனர்.

எதிராக எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அநுரகுமர திஸநாயக்க தலைமையிலான ஜே .வி.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன வாக்களித்தன. தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் விக்னேஸ்வரன் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசமைப்பில் குறைபாடுகள் காணப்பட்டால் அது சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்”,

இவ்வாறு அரசாங்கத்தின் பங்காளி கட்சியான லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் வினவிய போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், “புதிய அரசமைப்பு ஊடாக இனப்பிரச்னைக்குதீர்வு காணப்பட வேண்டும் என்பது லங்கா சமசமாஜ கட்சியின் பிரதான கோரிக்கையாக காணப்படுகிறது. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலங்களில் தேர்தல் மேடைகளில் அரசமைப்பின் 20ஆவது திருத்தம், புதிய அரசமைப்பு ஆகிய விடயங்கள் பிரதானமானவையாகக் காணப்பட்டன.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்கி 20ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் காட்டிய அக்கறை புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரத்தில் காட்டப்படவில்லை. புதிய அரசமைப்பு தொடர்பில் நிபுணர் குழு நியமிக்கப்பட்டது அக்குழுவின் செயல்பாடுகள், மக்களின் அபிப் பிராயத்தை கோரியமை தொடர்பில் முன்னேற்றகரமாக காணப்படுகிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

புதிய அரசமைப்புக்கான மூல வரைவு இந்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. இருப்பினும் இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கபட வில்லை. புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது கானல் நீர்போல காட்சியளிக்கிறது - என்றார்.

(ஐ)

## புதிய தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரிமை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கு உண்டு என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்றுதிங்கட்கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், மாகாண சபை தேர்தலையும், உள்ளூராட்சிமன்ற தேர்தலையும் விரைவாக நடத்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது. மக்கள் மத்தியில் செல்வதற்கு பயந்து நல்லாட்சி அரசாங்கத்தை போன்று தேர்தலை பிற்போட வேண்டிய தேவை எமக்கு கிடையாது. உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கு எவ்வித சட்ட சிக்கல்களும் கிடையாது கோவிட் -19 பெருந்தொற்று மாத்திரமே உள்ளது.

மாகாண சபை தேர்தலை நடத்துவதில் சட்ட சிக்கல் காணப்படுகிறது. மாகாண சபை தேர்தல் காலவரையறை இன்றி பிற்போடப்பட்டமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்கள் பொறுப்பு கூற வேண்டும்.

மாகாண சபை தேர்தல் முறைமை தொடர்பிலான சிக்கல் நிலையை நல்லாட்சி அரசாங்கம் தேர்தலுக்கு பயந்து திட்டமிட்ட வகையில் உருவாக்கியது.

மாகாண சபை தேர்தல் முறைமை தொடர்பில் புதிய சட்டத்தை இயற்றாமல் மாகாண சபை தேர்தலை ஒருபோதும் நடத்த முடியாது. மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான புதிய சட்டம் இயற்றுவது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றும் சொன்னார். (ஐ)

## சீவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனர்.

மருத்துவமனையில் வைக்கப்பட்ட அவரின் சடலம் வைக்கப்பட்டிருந்த நிலையில் மரண விசாரணைகள் நேற்று இடம்பெற்றது. பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி ச. சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் உடல் கூற்று பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். (ஐ-2)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களும் அடங்கு கின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 158 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 23 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோர். 7 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டோர். அதேவேளை, ஒருவர் 30 வயதுக்குட்பட்டவர். (இ)

## மூத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற்ற அவர் வயது மூப்பு மற்றும் நோய் காரணமாக கடந்த சில வருடங்களாக பத்திரிகைப் பணியிலி ருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

1942 ஜூலை 25ஆம் திகதி வட்டுக் கோட்டையில் பிறந்த வ. ம. கானமயில் நாதன் தொழில்நுட்ப கல்லூரியில் பொறியியல் கற்கையை பயின்றிருந்தார். அந்த சமயத்தில், 1964 ஆம் ஆண்டு ‘ஈழநாடு’ நாளிதழ் மூலமாக பத்திரிகையாளராக இணைந்த அவர், 1966 இல் கொழும்பில் வெளிவந்த தினபதி நாளிதழ், சிந்தாமணி வார இதழின் உதவி ஆசிரியராகவும், செய்தி ஆசிரியராகவும் பணியாற்றியிருந்தார்.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்த அவர், வீரகேசரி நாளிதழின் யாழ். அலுவலகத்தின் பொறுப்பு ஆசிரியராக இணைந்திருந்தார். 1985ஆம் ஆண்டு உதயன் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் ஸ்தாபக ஆசிரியராகவும் பிரதம ஆசிரியராகவும் இருந்த அவர் அந்த நாளிதழின் வார இதழான சஞ்சீவியின் பிரதம ஆசிரியராகவும் பதவி வகித்தார். காலைக்கதிர் நாளிதழின் ஸ்தாபக ஆசிரியராக இருந்த அவர் சிறிது காலம் அந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றினார். இறுதியாக உதயன் - சஞ்சீவியின் கௌரவ பிரதம ஆசிரியராகவும் அவர் இருந்தார்.

சுமார், ஆறு தசாப்த காலம் பத்திரிகை பணியில் ஈடுபட்ட அவர், போர் காலத்தில் குறிப்பாக தமிழர் போராட்ட அமைப்புகள் - இலங்கை, இந்திய இராணுவங்களின் ஆதிக்கத்தின் காலத்திலும் பத்திரிகைப் பணியை விடாது தொடர்ந்திருந்தார். செய்திகளில் நடுநிலைமையை எப்போதும் பின்பற்றிய அவர் மூத்த அரசியல் தலைவர்களாலும் போராட்ட அமைப்புகளின் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர்.

எனினும், சில ஆயுதக் குழுக்கள் அவர்மீது கொலை முயற்சி தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன். பல்வேறு அச்சுறுத்தல்கள் - நெருக்குதல்களுக்கு மத்தியில் பணியாற்றிய அவர், 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுவரை வெளியே நடமாட முடியாதளவு அச்சுறுத்தலுக்கு இலக்கானார். இதனால் அவர், உதயன் நாளிதழ் அலுவலகத்திற்குள்ளேயே வசித்தார். அந்த சமயத்திலும்கூட அவர்மீது ஆயுதக் குழு ஒன்று கொலை முயற்சிகளை மேற்கொண்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம், கைலாசப்பிள்ளையார் கோயிலடியிலுள்ள அவரின் இல்லத்தில் இடம் பெறும். (ஐ)

## உணவுப்பொதி, தேநீர் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 23

உணவுப் பொதி மற்றும் தேநீர் ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்க சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கத் தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பகலு ணவு பொதியொன்றில் விலையை 20 ரூபாயி னாலும், ஒரு கோப்பை தேநீரின் விலையை 5 ரூபாயினாலும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இன்று முதல் இந்த விலை அதி கரிப்பு அமுலாகும் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

## "மாவீரரை நினைவேந்துவதை தடுக்க எவராலும் முடியாது!"

யாழ்ப்பாணம், நவ. 23

"எது எப்படி இருந்தாலும் மாவீரர் நாளை நினைவேந் துவதை உலகில் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை மக்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்", என்று முன் னாள் வடமாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.

மேலும், ஒவ்வொருவரும் தங்களின் இறந்த மாவீரர் களை நினைவேந்த வேண்டும். அதனால், இந்த தடை உத்தரவுகளை உடைத்தெறிய வேண்டும்.

நூற்றுக்கணக்கிலோ, ஆயிரக்கணக்கிலோ நாங்கள் திரள் கின்றபோது, கொரோனாவை இவர்கள் காரணம் காட்டினால் இடைவெளிகளைப் பேணி நாங்கள் இதை செய்ய முடியும். ஆகவே, இதை வைத்துகொண்டு தடை உத்தரவு பெற முயற் சிப்பது இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறையாகவே நாங்கள் இதைப் பார்க்கின்றோம்.- என்றார். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம்
## 23 கார்த்திகை 2021

"புல்லின் இதழை மாந்தன் உருவாக:கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்"

**தோமஸ் அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)**

## மரண அறிவித்தல்

### கதிரவேலு சண்முகம்

(இளைப்பாறிய பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)



**பிறப்பு - 11.11.1938 இறப்பு - 21.11.2021**

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசாவிளான், சுன்னாகம், கொழும்பு, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு சண்முகம் நேற்றுமுன்தினம் 21-11-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சண்முகம் – இளையம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் – அம்மாபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற நவநாயகமலர் அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஸ்ரீகௌரி அவர்களின் அன்புத் தந்தையும், கஸ்ரோ அவர்களின் அன்பு மாமனாரும், அஸ்வந், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும்,கணேசன், ராசமணி, காந்திமதி, சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

பார்வைக்கு :
Tuesday, 23 Nov 2021 5:00 PM - 8:00 PM
Ogden Funeral Homes 4164 Sheppard Ave E, Scarborough, ON M1S 1T3, Canada.

கிரியை :
Wednesday, 24 Nov 2021 9:00 AM - 12:00 PM
Ogden Funeral Homes 4164 Sheppard Ave E, Scarborough, ON M1S 1T3, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொள்ள முன்பதிவு அவசியம். மேலதிக விவரங்களுக்கு குடும்ப உறுப்பினருடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**கதிர்காமநாதன் - பெறாமகன்**
**Mobile : +14169028920**

தகவல் :
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### திருமதி காணிக்கை லூத்தம்மா

**பிறப்பு - 03.05.1933 இறப்பு - 21.11.2021**

யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காணிக்கை லூத்தம்மா நேற்றுமுன்தினம் (21-11-2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற மரிசால் – இன்னேசத் தம்பதிகளின் அன்பு மூத்த மகளும், செல்லத்தம்பி – யக்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காணிக்கையின் அன்பு மனைவியும், செபமாலையம்மா, யசிந்தா, மெசியா(றீல்), காலஞ்சென்ற ரவி, சின்னவன், மீனா ஆகியோரின் அன்பு பாசமிகு தாயாரும்,காலஞ்சென்ற காணிக்கை அருமத்துரை(லண்டன்), கங்கப்பென், காலஞ்சென்ற ஞானமணி(பிரான்ஸ்), காலஞ்சென்ற சிந்தாத்துரை(புலவர்), மலர், ஆசைத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,ஜெகநாதன், பிறேமன், ஜோசேப், ஜீவராணி(பவுண்), அமிலன் ஆகியோரின் பாசமிகு மாமி யாரும்,காலஞ்சென்றவர்களான விக்ரோறியா(துரையம்மா), சிலுவராசா, அருமமுத்து(உத்தரியம்), ஆபரணம், தங்கப்பொன், சின்ராசா, மாசில்லான், முத்தையா, அன்னபாக்கியம்(லண்டன்), காலஞ்சென்றவர்களான ஜோசேப்,வென்சிலாஸ்(பிரான்ஸ்), அரியகுமாரன் மற்றும் ராணி, விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மச்சான் மச்சாள் மருமகளும்,கௌசன், ஜெனா, றீகன்– தபித்தா(பிரான்ஸ்), றமன்– சுமிதா(பிரான்ஸ்), ரங்கன்– ஜீவினி, சதீஸ்– ஜீவிதா, சுஜித், றீகா(லண்டன்), றொகன்– லக்ஸ்சி, சிம்சன்(பிரான்ஸ்), எமரின்– மோனிஷா, ஜெறான், டென்சன், டெல்மன், ஜெனி, டென்சிகா, அபி, காலஞ்சென்ற சுஜாந், மிதுன், ஜெறோமி ஆகியோரின் பேத்தியும்,டிவேன்சன், றபிஷன், றபிஷா, சுமிந்தன், றக்சிகா, றித்திகா, றித்திஸ், சுஜானா, பிறிந்தா, சஞ்சோ, றாம்சி, றொக்சிகா, கெவின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**றீகன் - பேரன்**
**Mobile : +33768084031**

தகவல் :
**குடும்பத்தினர்**

### கல்வி TV CHANNEL-1

**23.11.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி TV CHANNEL - 2

**23.11.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
23.11.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## நினைவேந்தல் உரிமை?

நினைவேந்தல் விவகாரம் மீண்டும் பேசுபொருளாகியிருக்கின்றது. ரணில் - மைத்திரி அரசாங்கத்தில் இது பேசுபொருளாக இருக்கவில்லை. ஏனெனில், அவர்கள் இதனை எதிர்க்கவில்லை. நிலைமாறுகால நீதியின் ஓர் அங்கமாக நினைவுகூர்தலை அவர்கள் அனுமதித்திருந்தனர். இதனை நல்லாட்சி பண்பாகவும் அவர்கள் காண்பித்துக் கொண்டனர். ஆட்சி மாற்றத்திற்கான தமிழ் மக்களின் பங்களிப்பே இதற்கான அடிப்படையாக இருந்தது. ஒருவேளை, சிங்கள பெரும்பான்மையின் ஆதரவுடன் அந்த ஆட்சி அமைந்திருந்தால், அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டிருந்திருப்பார்கள் என்பதை ஊகிப்பது கடினம்தான். இப்போதும் சஜித் பிரேமதாஸ நினைவுகூரல் விவகாரத்திற்கு ஆதரவாகவே பேசியிருக்கின்றார். ஆனால், அதுவே விடுதலைப் புலிகள் என்று வருகின்றபோது - அவர் அதனை ஆதரிப்பாரா என்பது சந்தேகமே!

இந்த அரசாங்கத்தின் அரசியல் பண்புகள் மிகவும் வெளிப்படையானது. அதாவது, இந்த அரசாங்கம் சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் அதிகாரத்திற்கு வந்திருக்கிறது. ஜனாதிபதி தேர்தலில் தனிச்சிங்கள வாக்குகளினால் கோட்டாபய வெற்றி பெற்றிருக்கின்றார். ஜனாதிபதி தேர்தலில் அவரை முற்றிலுமாக தமிழ் மக்கள் எதிர்த்திருந்தனர். வடக்கு - கிழக்கில் மட்டுமே, ஜனாதிபதி வேட்பாளர், சஜித் பிரேமதாஸ அமோக வெற்றிபெற்றிருந்தார். ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய மீதான எதிர்ப்பே - சஜித்திற்கான ஆதரவாக இருந்தது. தனிச்சிங்கள ஆதரவுடன் வெற்றிபெற்ற காரணத்தால்தான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னையொரு சிங்கள - பௌத்த தலைவன் என, பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அடுத்தது - இந்த அரசாங்கம் அடிப்படையிலேயே போர் வெற்றியை தங்களின் தேர்தல் முதலீடாகக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவு கூர்வதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவ்வாறு ஏற்றுக் கொண்டால், அது - அவர்களின் தேர்தல் முதலீட்டிற்கே மோசமாகி விடும். இதில், சிங்கள தேசியம் என்றெல்லாம் ஒன்றுமில்லை. தேர்தல் முதலீடு தொடர்பான அச்சம்தான் அனைத்துக்கும் காரணம். எனவே, இந்த அரசாங்கம் - நினைவுகூர்தல்மீதான கட்டுப்பாடுகளை விதிப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இது ஏற்கனவே, எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

ஆனால், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் யாரோ ஒருவரின் மகன் - மகள் என்பதை அரசாங்கம் உணர மறுக்கின்றது. விடுதலைப் புலிகளை போரில் வென்றுவிட்டதாக கூறிக்கொள்ளும் அரசாங்கமோ - மறுபுறம், போரில் தோல்வியடைந்தவர்களை நினைவு கூர்வதை தடுப்பதானது, அடிப்படையில் - அவர்களின் வெற்றி தொடர்பில், அவர்களே சந்தேகப்படுவதாகும். நினைவுகூர்தல் என்பது ஒரு கூட்டுரிமையாகும். அதனை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். இதுவும் உள்ளக பொறிமுறையின் ஓர் அங்கம்தான். உள்ளகப் பொறிமுறை மூலம் பிரச்னைகளை தீர்க்கப் போவதாக கூறிவரும் அரசாங்கம் - மறுபுறும், பாதிக்கப்பட்ட மக்களின் நினைவு கூர்தலை தடுக்க முற்படுவதானது, அவர்கள் கூறிவரும் உள்ள பொறிமுறையை, அவர்களே நிராகரிப்பதற்கு சமமான ஒன்றாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வெற்றி கொள்வதுதான் உள்ளக பொறிமுறைக்கான அத்திபாரமாகும். ஆனால், அரசாங்கமோ பாதிக்கப்பட்ட மக்களை தொடர்ந்தும் இராணுவ வெற்றிக் கொண்டாட்டங்களின் பார்வையாளராக மட்டுமே வைத்திருக்க விரும்புகிறது. தமிழ் மக்களின் நினைவுகூர்தல் உரிமையையே மறுதலிக்கும் இந்த அரசாங்கம், எவ்வாறு தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொள்ளும்? இந்த அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கும் புதிய அரசியல் யாப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு நியாயமானதோர் அரசியல் தீர்வு கிடைக்குமென்று எந்த அடிப்படையில் நம்பிக்கைகொள்ள முடியும்?

# தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமையீனம் சர்வதேச அரங்கிலும் பிரதிபலிக்கும் பரிதாபம்

**- அலசுவது இராஜதந்திரி -**



இலங்கையின் தமிழ் அரசியல் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் கனடாவில் இடம்பெற்ற கூட்ட மொன்றில் பங்குபற்றியபோது அந்தக் கூட்டம் குழப்பியடிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் இலங்கை அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்குகின்றனர் எனத் தெரிவித்தே கனடாவில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களில் ஒரு சாரார் சுமந்தி ரனும் சாணக்கியனும் கலந்து கொண்ட கூட்டத்தில் ரகளை செய்துள்ளனர்.

இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர்களை தென்னிலங்கையின் பேரினவாத அரசி யல்வாதிகள் தாழ்மைப் படுத்துவது ஒருபுறமிருக்க, நம்மவர்களே நம்மவர்களை ஏளனப்படுத்தி தாழ்மைப் படுத்துவது காலங்காலமாகவே இடம் பெற்று வருகின்ற - கவலைக்குரிய நடவடிக்கையாகவே இருக்கின்றது. குறிப்பாக, புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் ஒரு நாகரிகமான அரசியல் சூழலில் வாழ்ந்து வருகின்ற நிலையில் சர்வதேச சமூகத்தவர் மத்தியிலும் எம்மை நாம் தாழ்த்திக்கொள்வது கவலைக்குரியதாகவே இருக்கின்றது.

சர்வதேச சமூகம் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மீது அனுதாபக் கண்கொண்டு பார்ப்பதன் காரணமாகவே வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வெளி நாடுகள் அடைக்கலம் கொடுத்துள்ளன. ஆனால், இந்த அனுதாபத்தையும் நீக்கிவிடும் விதத்திலேயே சில புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு நிலவரங்களைப் பொறுத்தவரை புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக இருந்து வருகின்றனர். வடக்கு - கிழக்கு தமிழர்களின் போராட்டங்கள் எழுச்சி கொள்ள ஆரம்பித்த காலம் முதல் துரோகி என்ற வார்த்தைப் பிரயோகமும் அப்போராட்டத்தோடு ஒன்றிணைந்ததாக இருப்பதோடு இவ்வார்த்தைப் பிரயோகம் பலியெடுத்தவர்களில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களது அரசியல் போராட்டங்களை முன்னெடுத்தவர்களும் அடங்குகின்றனர்.

அத்துடன், துரோகிகள் என்று குறிப்பிடப்பட்டவர்களை அழித்தொழிக்க வேண்டுமென்று ஆயுதம் ஏந்தியவர்களும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில், மிதவாத அரசியலாக இருக்கலாம். அல்லது தீவிரவாத அரசியலாக இருக்கலாம். இரு வழிகளும் இலக்குத் தவறி தமிழர்களின் அரசியல் நடவடிக்கைகள் மிகவும் தாழ்நிலையில் இருப்பதையும் அறிய முடிகின்றது.


புலம்பெயர்ந்த தமிழர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு - கிழக்கு யுத்தக் கெடுபிடிகள் காரணமாக இலங்கையில் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறியோராக இருக்கின்றனர். அவர்களின் உறவுகளில் பலர் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் இருக்கின்றனர். அத்துடன், அரசியல் கைதிகளாகவும் இருக்கின்றனர். இதுதவிர வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டு உயிரிழந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் வெளிநாடுகளில் வசதி வாய்ப்புகளோடு வாழலாம். ஆனால், தாயகத்தில் தமது உறவுகள் மற்றும் இழப்புகள் குறித்த மனத்தாங்கலுடன் அவர்கள் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. தமது உறவுகளில் பலர் தொடர்ந்தும் அரசியல் கைதிகளாக இருக்கின்ற நிலையிலும், காணாமல் ஆக்கப்பட்டோராக இருக்கின்றதன் காரணமாகவும் மனக்கி லேசத்துடன் இருக்கின்ற புலம்பெயர்ந்த தமிழர்கள், தாம் வாழ்கின்ற தேசங்களுக்கு இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங் களைச் சேர்ந்த அரசியல் பிரதிநிதிகள் வருகை தரும்போது தமது மன ஆதங்கங்களை வெளி யிடுவது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள் எம். ஏ. சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் கனடாவில் கண்டனத்துக்குள்ளாகியுள்ள விடயம் அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் மனக்குமுறல்களின் வெளிப்பாடாகவே இருக்கின்றது. மறுபுறத்தே, இலங்கையின் வடக்கு - கிழக்கில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகவோ அல்லது காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாகவும் ஏற்படுகின்ற சட்டப் பிரச்னைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஆஜராகின்ற சட்டத்தரணிகளில் எம். ஏ. சுமந்திரன் முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இலங்கையின் வடக்கு - கிழக்கின் நிஜமான கள நிலவரத்தை அறிந்த நிலையில் எத்தகைய கோஷங்களும் , வாதப்பிரதிவாதங்களும் புலம்பெயர்ந்த தமிழர்களால் முன்னெடுக்கப்படவேண்டியதே இன்றியமையாததாகின்றது. இதைவிடுத்து எம்மை நாமே தாழ்த்திக்கொள்ளும் அருவருக்கத்தக்க அரசியலை சர்வதேச சமூகம் முன்பாகவும் அரங்கேற்றும் பட்சத்தில் எமது அரசியல் செயற்பாடுகள் வெளி உலகத்தவராலும் அர்த்தமற்றதாக நோக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**நவம்பர் - 23 செவ்வாய்க்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை- 07**
**நல்ல நேரம் : 7.30 - 9.00**
**ராகு காலம் : 3.00 - 4.30**
**திதி : சதுர்த்தி**



## இன்றைய ராசிபலன்

**23.11.2021**

**மேடம்**
உறவினர்களது செயலால் மனதில் சிறியதொரு திருப்தி வரும். சமாளிக்கும்படியான சிறிய செலவு ஒன்று ஏற்படக்கூடும். மனதுக்கு பிரியமானவருடன் மகிழ்ச்சியாக உரையாடுவீர்கள்.

**இடபம்**
அலுவலக பணியை சிறப்பாக செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள். இன்று வரும் செய்தி மனதின் சங்கடம் ஒன்றைத் தீர்க்கும். பணியிடத்தில் முன்பு இருந்த தாழ்வு மனப்பான்மை தீரும்.

**மிதுனம்**
உங்களது முயற்சியால் உறவினர் ஒற்றுமை மேம்படும். உங்களின் எண்ணங்களை வெளியிட இன்று உகந்த நாள் அல்ல. பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்**
வீட்டில் உள்ள ஒருவருக்கு திருமண முயற்சி துவங்கும். பிள்ளைகள், பேரன், பேத்தி மூலம் சந்தோஷ செலவு உண்டாகும். எப்போதோ நீங்கள் எடுத்த முயற்சி இன்று எதிர்பார்த்த வெற்றி தரும்.

**சிம்மம்**
உங்களின் நியாயத்தன்மை காரணமாக நல்ல பெயர் எடுப்பீர்கள். கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். உங்களது பேச்சுக்கு மதிப்பிருக்கும். பெண்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். பயம் ஒன்று நீங்கும்.

**கன்னி**
உழைப்பை அதிகரிப்பதன் மூலம் நன்மை அடைவீர்கள். சிறு சிறு தடைகள் வரும். எதையும் முயன்றே முடிக்க முடியும். மற்றவர் செயலில் தலையிட வேண்டாம். கவனம் தேவை.

**துலாம்**
தடைபட்ட நல்ல விஷயம் உங்களது முயற்சியால் கைகூடும். பல காலமாக அனுபவித்து வந்த சிறு சிரமங்களில் இருந்து மீளுவீர்கள். இன்று ஏற்படும் சிறு சிறு தாமதங்கள் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

**விருட்சிகம்**
மற்றவர்கள் வம்பு பேசும்போது அவர்களை புறக்கணியுங்கள். உங்களது செயலால் சிறு சங்கடங்களுக்கு ஆளாகி மீளுவீர்கள். பேச்சில் கவனமாக இருப்போருக்கு இன்று பிரச்னையே வராது.

**தனுசு**
எதிலும் அலட்சியப்போக்கு வேண்டாம். ஏற்ற இறக்கங்கள் இருக்கும். யோகமான நாள். தாமதம் ஏற்படுவது பற்றி கவலைப்பட வேண்டாம். புது வாய்ப்பு வரும். மற்றவர்களின் பிரச்னையை தீர்ப்பீர்கள்.

**மகரம்**
உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். ஓய்வின்றி உழைப்பீர்கள். கலகலப்பான நாள். தன்னம்பிக்கை இழக்க வேண்டாம். ஒரே சமயத்தில் பல வேலைகளை கவனிக்க வேண்டி வரும்.

**கும்பம்**
உங்களது திறமை காரணமாக எதிலும் நன்மை காண்பீர்கள். தந்தைக்கு மகிழ்ச்சி கூடும்படியான நிகழ்வுகள் நடக்கும். நண்பர் ஒருவருக்காக அலைச்சலுக்கு ஆளாக வாய்ப்புண்டு.

**மீனம்**
முயற்சி ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். பரபரப்பு கூடும். உங்களின் பழக்கத்தை மாற்றிக் கொள்ளும்படியான திருப்பம் வரும். பாராட்டு கிடைக்கும். சமீபத்தில் ஏற்பட்ட தொல்லை ஒன்று நீங்கும்.


# தி.மு.க. கூட்டணிக்குள்ளும் குழப்பம் அதிருப்தியில் கூட்டணிக் கட்சிகள்

சென்னை, நவ. 23

தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை ஜனவரி மாதத்துக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமும் அரசியல் கட்சிகளும் தீவிரமாக செய்து வருகின்றன. இந்த நிலையில், தி.மு.க. கூட்டணிக்குள் குழப்பங்கள் உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் என்பது தமிழ் நாடு முழுமைக்கும் நடைபெற இருப்பதால் தி.மு.கவின் கூட்டணி கட்சியினர் இதில் தங்களுக்கான இடம் எது என்பதை அறியமுடியாமல் குழப்பத்தில் இருக்கிறார்கள்.

தி.மு.க. கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் தங்களிடம் தலைமை இது குறித்து அதிகாரபூர்வமாக பேசவில்லையே என்ற வருத்தத்தில் இருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



சில நாட்களாகவே விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் முத்தரசன், முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொய்தீன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்கள் தனிப்பட்ட முறையில் தங்களுக்குள் சில கருத்துப் பரிமாற்றங்களை நடத்தி வருகிறார்கள்.

"உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக தி. மு. க தலைமையில் இருந்து உங்களை தொடர்பு கொண்டார்களா?" என்று ஜவாஹிருல்லா கேட்க திருமாவளவன் "இதுவரை இல்லை" என்று பதில் சொல்லியுள்ளார். இத்தனைக்கும் அவர் சில நாட்கள் முன்புதான் அறிவாலயத்தில் முதல்வரை சந்தித்துவிட்டு வந்தார்.

"தி. மு. க எதிர்க்கட்சியாக இருந்தபோது எந்தப் பிரச்னையாக இருந்தாலும் கூட்டணிக் கட்சிகளை அழைத்து பேசுவார் ஸ்டாலின். முதலமைச்சர் ஆகிவிட்ட பின், இதுவரை ஒரு முறை கூட கூட்டணி கட்சிகளின் கூட்டத்தை அவர் கூட்டவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டு விடலாம் என்ற நிலையில் தி.மு.க.வின் இந்த மிக வேகமான போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களிடையே கவலையையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது" என்கிறார்கள் கூட்டணி கட்சிகளின் இரண்டாம் நிலைத் தலைவர்கள்.

# அமெரிக்காவிலிருந்து திரும்பிய கமல்ஹாசனுக்கு கொரோனா தொற்று


சென்னை, நவ. 23

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசனுக்கு கொரோனா தொற்று உறுதியாகி உள்ளது. இதையடுத்து அவர் நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அமெரிக்கா சென்று திரும்பிய பின்னர் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "அமெரிக்கப் பயணம் முடிந்து திரும்பிய பின் லேசான இருமல் இருந்தது. பரிசோதனை செய்ததில் கோவிட் தொற்று உறுதியானது.

மருத்துவமனையில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். இன்னமும் நோய்ப் பரவல் நீங்கவில்லை என்பதை உணர்ந்து அனைவரும் பாதுகாப்பாக இருங்கள்" என்று கமல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சித் தலைவர், திரைப்பட நடிகர், தயாரிப்பாளர், பிக் பாஸ் தமிழ் நிகழ்ச்சித் தொகுப்பாளர் எனப் பல்வேறு துறைகளில் கமல்ஹாசன் தொடர்ந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.



# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை பொன்.ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

மதுரை, நவ. 23

"காவல்துறை சிறப்பு எஸ்.ஐ. பூமிநாதன் கொல்லப்பட்ட சம்பவம், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்பதை காட்டுகிறது" என முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கின்றார்.



மதுரை மாநகராட்சி தேர்தலில் பா. ஜ. க. சார்பில் போட்டியிட விரும்புவோரிடம் விருப்ப மனு பெறும் நிகழ்வு மதுரை மாநகர் பாஜக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியினரிடம் இருந்து பொன்.ராதாகிருஷ்ணன் விருப்ப மனுக்களைப் பெற்றார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெட்ரோல், டீசல் விலையை தமிழகத்தில் குறைக்க வலியுறுத்தி பா. ஜ. க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது. கச்சா எண்ணெய் விலைக்கேற்ப பெட்ரோல், டீசல் விற்பனை செய்யப்படுகிறது. இதற்கும், பிரதமர் மோடிக்கும் சம்பந்தம் இல்லை.

சாலை போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு பெட்ரோல், டீசல் வரி மூலம் தான் சரி செய்ய முடியும். விவசாய வருமானத்தை இரு மடங்காகப் பெருக்குவது, மானிய விலையில் உரம், பூச்சிக் கொல்லிகள் வாங்குவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இருந்தும் வேளாண் சட்டங்களை விவசாயிகள் ஏற்கவில்லை.

பாஜக இப்போதும் அதிமுக கூட்டணியில் தான் உள்ளது. மதுரை அம்மா உணவகத்தில் கருணாநிதி புகைப்படத்தை வைத்தது கண்டிக்கதக்கது. இதில் தொடர்புடையவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும். ஆடு திருடர்களை விரட்டிச் சென்ற நாவல்பட்டு சிறப்பு எஸ்.ஐ. பூமிநாதன் கொல்லப்பட்ட சம்பவம், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்பதை காட்டுகிறது என்றார். மாவட்ட தலைவர் பா.சரவணன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# இலங்கைக்கு வருகின்றார் ஐ.நாவின் முக்கிய அதிகாரி

## பல தரப்பினரையும் சந்திப்பார்



கொழும்பு, நவ. 23

ஐக்கிய நாடுகள் சபையின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளுக்கான அரசியல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் விவகாரங்கள் திணைக்களத்தின் உதவிப் பொதுச் செயலாளர் காலித் கியாரி இன்று இலங்கைக்கு வருகிறார்.

அவர் இலங்கையின் முக்கிய அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், மதத் தலைவர்கள் மற்றும் இராஜதந்திர சமூகத்தின் பிரதிநிதிகளைச் சந்திப்பார்.

இந்த ஆண்டு செப்ரெம்பரில் ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்ததைத் தொடர்ந்து, கியாரியின் இந்த விஜயம் அமைந்துள்ளது.

துனிசியாவை சேர்ந்த கலீத் கியாரி, மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான அரசியல் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கான உதவிப் பொதுச் செயலாளராக மே 2019 இல் பதவியேற்றார்.

அதற்கு முன், கியாரி துனிசிய வெளியுறவு அமைச்சகத்தில் அமெரிக்கா, ஆசியா மற்றும் ஓசியானியாவின் பொது இயக்குநராக இருந்தார். அவர் இராஜதந்திரம் மற்றும் வெளியுறவு விவகாரங்களில் 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டவர். (அ)

## இலங்கை - ரஷ்ய விமான சேவை ஞாயிறு முதல் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, நவ. 23

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நேரடி விமான சேவையை மீண்டும் ஆரம்பித்த ரஷ்ய ஏரோப்ளோட் எயார்லைன்ஸின் முதலாவது விமானம் 240 பயணிகளுடன் நேற்று முன் தினம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

1964 ஆம் ஆண்டிலிருந்து ரஷ்யாவுக்கும் இலங்கைக்குமிடையிலான விமான சேவை ஆரம்பமானது.

எனினும் கடந்த ஆண்டு உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கோவிட் தொற்று காரணமாக விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது.

## முகக்கவசம் அணியாதவர்கள்மீது வவுனியா பொலிஸார் நடவடிக்கை

வவுனியா, நவ. 23

வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதியில் நேற்றுக் காலை முதல் முகக்கவசம் அணியாமல் வீதிகளில் நடமாடுபவர்களுக்கு எதிராக பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை முதல் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது முகக்கவசம் அணியாமல் வீதிகளில் நடமாடும் பலருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டதுடன் அவர்களுக்கு முகக்கவசம் அணிவித்து பொலிஸ் நிலையைத்துக்கு அழைத்துச் சென்றனர் .

## நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய முப்படையினர்

கொழும்பு, நவ. 23

நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 தாக்குதலைத் தொடர்ந்து, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆயுதம் தாங்கிய படையினரை அமைதியை பேண அழைப்பு விடுத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஒரு மாத காலத்துக்கு அமுலாகும் வகையில் ஒவ்வொரு மாதமும் 22 ஆம் திகதி இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பூஜித்துக்கு எதிராக 855 குற்றச்சாட்டுகள்

கொழும்பு, நவ. 23

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக போதியளவான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தபோதிலும், அதனை தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், 855 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப் பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று வாசித்து, கையளிக்கப்பட்டது.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெதிகே மற்றும் மொஹமட் இர்ஷடீன் ஆகிய மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் நேற்று இடம்பெற்றன.

இதன்போது முன்னாள் பொலிஸ் மாஅதிபருக்கு எதிராக 855 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோவுக்கு எதிராகவும் 855 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (அ)

## மீண்டும் மழை

கொழும்பு, நவ. 23

நாட்டிற்கு அண்மையாக கீழ் வளிமண்டலத்தில் விருத்தியடையும் தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் மழை நிலைமை இன்று முதல் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இன்று வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## இடையூறு செய்த பிரதேச சபை உறுப்பினரை மின்கம்பத்தில் கட்டி வைத்த பிரதேசவாசிகள்

கொழும்பு, நவ. 23

களுத்துறை - கல்பாத்த பிரதேசத்தில், மதுபோதையில் பிரதேசவாசிகளுக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரை மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டதன் பின்னர் களுத்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட நபர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாணந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரான பிரதேச சபை உறுப்பினர் மேலும் சிலருடன் கல்பாத்த பகுதிக்கு வந்து மது அருந்தியுள்ள நிலையில், அங்கிருந்து கல்பாத்த, பஹூரு பொல பிரதேசத்துக்கு அவர் தனியாகச் சென்று பிரதேச வாசிகளுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

இதனையடுத்து, அங்கிருந்த பிரதேசவாசிகள், குறித்த பிரதேச சபை உறுப்பினரை மின்கம்பத்தில் கட்டி வைத்து, பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவித்துள்ளனர்.

அழைப்பின் பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபர் கைதுசெய்து, நாகொட வைத்தியசாலையின் வைத்தியர் முன்னிலையில் பிரசன்னப்படுத்தியபோது, அவர் மது அருந்தியிருந்தமை உறுதி செய்யப்பட்டது.





## சிறில் காமினிக்கு ஆதரவு தெரிவித்து சி.ஐ.டி முன் திரண்ட அருட்தந்தையர்

கொழும்பு, நவ. 23

அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக மூன்றாவது நாளாகவும் நேற்று குற்ற விசாரணைத் திணைக்களத்தில் ஆஜரானார்.

ஈஸ்டர் தின தாக்குதலுக்கு நீதி கோரிய ஒருவரை அழைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்த அருட்தந்தையர்கள் நேற்றுக் காலை குற்ற விசாரணை திணைக்களத்தின் முன்னால் அமைதியான ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அருட்தந்தை சிறில் காமினியினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே குற்று புலனாய்வு அதிகாரிகளினால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# பட்ஜெட்டில் வடக்கு மீனவர் கண்டுகொள்ளப்படவில்லை

## மன்னார் மீனவர் சமாசம் குற்றச்சாட்டு

மன்னார், நவ. 23

**அண்மையில் ஏற்பட்ட சூறாவளி, இயற்கை அனர்த்தம் மற்றும் இந்திய மீனவர்களால் எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களுக்கு இது வரை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு சதம் கூட இழப்பீடாக வழங்கப்படவில்லை எனவும் வரவு - செலவுத் திட்டத்தில் மீனவர்கள் கண்டு கொள்ளப்படவில்லை எனவும் மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.**

நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் வாழ்வாதாரச் சிக்கல்கள் தொடர்பாக பல தடவைகள் வெளிக்கொண்டு வந்திருந்தோம்.

ஆனால், யாரும் குறித்த விடயங்களை கண்டு கொள்ளவில்லை. தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் தொழில் இழப்புகளுக்கு எந்த வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

அண்மையில் ஏற்பட்ட சூறாவளியாக இருக்கட்டும், இயற்கை அனர்த்தமாக இருக்கட்டும் ,இந்திய மீனவர்களால் அண்மைக்காலமாக எமது மீனவர்களின் பாதிப்பு, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களுக்கு இது வரை ஒரு சதம் ரூபாய் கூட இழப்பீடாக வழங்கப்படவில்லை.

இவர்கள் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் அரசாங்கத்தினாலும்,ஏனைய தரப்பினராலும் நடத்தப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் தொடர்ந்து கடல் தொழிலை மேற்கொண்டு தமது குடும்பத்தை கொண்டு செல்வதற்கு கூட யாரும் உதவிகளை மேற்கொள்ள முன்வரவில்லை.

தற்போது பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அரிசி உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. ஆனால் பிடிக்கப்படுகின்ற மீன்களின் விலை அதே விலையில் தான் உள்ளன.

எனவே மீனவர்களின் உற்பத்திக்கான உரிய விலை கிடைக்க வேண்டும்.வாழ்வாதாரத்துடன் சமனாக போட்டி போட்டு வாழக்கூடிய வகையில் அவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவித் திட்டங்களை அரசு செய்ய வேண்டும் அல்லது தொண்டு அமைப்புக்களாவது முன் வந்து பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர்களுக்காக செயல்படவேண்டும்.

இந்த நிதியாண்டில் நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் மீனவர்களுக்கு ஏதாவது ஒரு இழப்பீட்டுத் தொகையோ அல்லது உதவித் தொகையோ ஒதுக்கீடு செய்யப்படும் என எதிர்பார்த்தோம்.

ஆனால், கொரோனாவால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள்,அதனுடன் இணைந்து கடமையாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் அரசு சலுகைகள் செய்ய முன் வந்திருந்தாலும் கூட மீனவர்களை கை தூக்கி விடுவதற்கு எந்த ஒரு முன்னேற்ற திட்டமும் குறித்த வரவு-செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படாமை வேதனையை ஏற்படுத்துகிறது.

எனவே அரசு ஏதோ ஒரு வகையில் நிதி மூலங்களைப் பெற்று மீனவர்களுக்கான தனியான ஒரு செயல்பாட்டை முன் னெடுத்து அவர்களின் வாழ் வாதாரத்தை உயர்த்தும் நடவ டிக்கைளை மேற்கொள்ள வேண் டும் என்று மீனவர்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)

# வீடுடைத்து திருட்டில் ஈடுபடும் இரண்டு பேர் யாழில் சிக்கினர்!

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணத்தில் வீடு உடைத்து திருட்டில் ஈடுபடும் இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளனவென யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருப் பகுதியில் வீடு உடைக்கப்பட்டு ஆறு பவுண் நகையும், ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறையிடப்பட்டிருந்தது.

முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 28 வயதுகளையுடைய நபர்கள் என்றும் அவர்களிடம் இருந்து ஆறரைப் பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்கள் வேறு பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

**கனடா கூட்டத்தில் குழப்பம்**

# தமிழ் அரசின் கிளையிடம் விளக்கம் கோரினார் மாவை!



யாழ்ப்பாணம், நவ. 23

கனடாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கலந்து கொண்ட கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கு கட்சியின் கனடா கிளையின் கருத்தை கோரியுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மற்றும் இரா. சாணக்கியன் ஆகியோர் கனடாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அங்கு வருகை தந்த சிலரால் குழப்பம் ஏற்படுத்தப்பட்டது. இதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறியிருந்தனர்.

இது தொடர்பிலேயே கட்சியின் கனடா கிளையிடம் கூட்டத்தில் குழப்பம் யாரால் ஏற்படுத்தப்பட்டது? ஏன் ஏற்படுத்தப்பட்டது என்பது தொடர்பில் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போது மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார். (ஐ-3)

# மாத்தறை சிறையிலுள்ள தமிழ் கைதியை கொழும்புக்கு இடம்மாற்றுமாறு கோரிக்கை

கொழும்பு, நவ. 23

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒரே ஒரு கைதி மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மாத்தறை சிறைச்சாலைக்கு சென்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள த. நிமலன் என்ற கைதியை தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வவுனியாவைச் சேர்ந்த தங்கவேல் நிமலன் என்பவரை மாத்தறை சிறைச்சாலையில் பார்வையிட்டு பேசியிருந்தோம். அவர் சார்ந்த வழக்கில் 3 சந்தேக நபர்கள் இருக்கும் நிலையில் அவரை மட்டும் தனிமைப் படுத்தி மாத்தறை சிறைச்சாலையில் தடுப்பில் வைத்துள்ளார்கள். ஏனைய இருவரும் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இருக்கின்றார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அவர் மட்டுமே மாத்தறை சிறைச்சாலையில் உள்ளார். ஒரே ஒரு தமிழ் கைதியாகவும் இச் சிறைச்சாலையில் அவரே உள்ளார். அவருக்கு மொழி சார்ந்த வசதிகளும் குறைவாக உள்ள நிலையில் அவர் எம்மிடம் அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஏனையவர்களை தடுத்து வைத்துள்ள சிறைச்சாலைகளில் தன்னையும் சேர்த்துக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். அது சம்பந்தமாக நாங்கள் நீதி அமைச்சர் அலி சப்ரியுடன் பேசுவோம்.

அத்துடன், கைதிகளை விடுவிப்பதற்குரிய அழுத்தங்களை நாம் தொடர்ந்தும் கொடுப்போம். அதேசமயம் அது நிறைவேறும் வரை இந்த கைதிகளை அவர்களது சொந்த மாவட்டத்தில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு கோரிக்கையையும் முன்வைத்துள்ளோம். தொடர்ச்சியாக இந்த வரவு-செலவுத் திட்டக் காலப்பகுதியில் கூட உரிய அமைச்சுக்கு கீழ் வரக்கூடிய விடயங்களை வலியுறுத்துவோம் என்பதையும் அவருக்கு தெரிவித்துள்ளோம்-என்றார். (அ)

# இலங்கையின் பொருளாதாரம் கொரொனாவால் கடும் பாதிப்பு

## கவலை வெளியிடுகிறது உலக வங்கி

கொழும்பு, நவ. 23

கொரோனா வைரஸ் தொற்று இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஏற்பாடு செய்திருந்த இணையவழி மூலமான நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே, தெற்காசியப் பிராந்தியத்தின் பிரதம பொருளாதார விசேட ஆய்வாளர் ஹான்ஸ் ரிமர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால், பல பிரச்னைகளை இலங்கை எதிர்கொண்டுள்ளதென்றும் அரசாங்கத்தால் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்னைகள் உண்டெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, இலங்கையின் முக்கிய பிரச்னை, மொத்த உற்பத்திக்கு அமைவாக நடைமுறையில் உள்ள கடன் அதிகமாக இருப்பதேயாகும் எனவும் அவர் சுட்டிக்காட் டினார்.

எனவே, எதிர்காலத்தில் கடனைச் செலுத்தும் வகையில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுப்பது முக்கிய தேவையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மல்லாகம் விபத்தில் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், நவ. 23

பட்டா ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மல்லாகம் சந்தியில் இடம் பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த பன்னாலையை சேர்ந்த இரத்தினசிங்கம் இராசகாந்தன் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தார்.

இவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)

# புதிய அரசமைப்பு பணிகள் ஜனவரியில் ஆரம்பமாகும்!

## சபையில் அறிவித்தார் ஜீ. எல். பீரிஸ்



**கொழும்பு, நவ. 23**

**வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் 2022 ஜனவரி மாதமே பாராளுமன்றம் மீண்டும் கூடும். அவ்வாறு கூடும்போது புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான பணிகள் ஆரம்பமாகும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

புதிய அரசமைப்புக்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் பணிகள் முடிவடைந்த பின்னர், சட்டமூலம் சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்படும். அதன்பின்னரே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இவ்வருடத்துக்குள் அப்பணிகள் நிறைவுபெறும்.

அதன்பின்னர் ஜனவரி இறுதியில் அல்லது பெப்ரவரி முதல் வாரத்தில் இருந்து புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கான பணிகள் ஆரம்பமாகும்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான தினேஷ் குணவர்தன குழுவின் அறிக்கையும் ஜனவரியில் சபையில் முன்வைக்கப்படும். புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கு இதுவும் பக்கபலமாக அமையும்- என்றார். (அ)

# ஆசிரியரைத் தாக்கிவிட்டு தப்பியோடிய மாணவர்கள்!

கொழும்பு, நவ. 23

ஆசிரியர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு சிறுமியும், சிறுவனும் தப்பியோடிய சம்பவமொன்று போத்தல-காசிதெனிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியரின் வீட்டுக்கு ஒட்டோவில் சென்ற 16 வயதுடைய சிறுமியும், சிறுவனொருவனும் நேற்று முன் தினம் இரவு ஆசிரியரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என போத்தல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தேகம புனித அந்தோனியார் கல்லூரியில் கடமையாற்றும் 45 வயதுடைய ஆசிரியர் ஒருவரே இவ்வாறு காயங்களுடன் பத்தேகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்த ஆசிரியர், மேற்படி சிறுமியின் தாயாருடன் தகாத உறவைப் பேணிவந்துள்ளதாகவும், இது தொடர்பில் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று வினவியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் குறித்த சிறுமி ஆசிரியரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் போத்தல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மக்களின் நினைவுகூரும் உரிமையை அரசாங்கத்தினால் தடுக்கமுடியாது

## ஸ்ரீநேசன் கூறுகிறார்

கொழும்பு, நவ. 23

யுத்தத்தினால் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் உரிமையை அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக தடுக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கத்தை பொறுத்தமட்டில் பெரும்பான்மையினருக்கு ஒரு சட்டம். தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் என்றதன் அடிப்படையில் செயல்படுவதாக ஸ்ரீநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், மாவீரர் தினத்தை ஜே.வி.பி.யினர் அனுஷ்டிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றால் இதனை இனவாதம் என்றே எண்ணத்தோன்றும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மக்கள் தங்களின் மனங்களில் தங்களின் இல்லங்களில் வாழ்விடங்களில் அனுஷ்டிப்பதை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது என ஸ்ரீநேசன் குறிப்பிட்டார்.

# இறக்குவாணை பொலிஸ் நிலையத்தில் 28 பொலிஸாருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, நவ. 23

இரத்தினபுரி, இறக்குவாணை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகள் மூலம் 28 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக கொடகவெலரக்குவானை பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.எஸ்.முனவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி, போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் சிறு குற்ற முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொலிஸ் நிலையத்தின் வழமையான கடமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# நினைவுத்தூபிகளை அழித்தொழித்து தமிழரின் உணர்வை அடக்க முடியாது

## சபையில் கூறினார் வினோ நோதராதலிங்கம்

கொழும்பு, நவ. 23

"மாவீரர் துயிலும் இல்லங்களையும், நினைவுத் தூபிகளையும் இடித்தழிப்பதன்மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளையும் அழித்துவிடலாம் என அரசு, பாதுகாப்பு தரப்பினர் மற்றும் இவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் காட்டிக் கொடுப்பாளர்களும் நினைத்து விடக்கூடாது. தமிழ் இனத்தின் அரசியல் விடுதலைக்காக, பாதுகாப்புக்காக, சுதந்திரத்துக்காக சமராடி உயிரிழந்த போராளிகள் - தியாகிகள் - தமிழ்த் தேசியவாதிகள் - மாவீரர்களை நினைவுகூரி அஞ்சலி செலுத்துவதற்கான உரிமை தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. அதனை தடுக்க முனையக் கூடாது."

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவதுபோல,



ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தை பயன்படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிவரை ஒன்று கூடல்களுக்கு தடைவிதிக்கும் விதத்திலான புதிய கட்டுப்பாடுகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ளது. வடக்கு-கிழக்கெங்கும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும். மாவீரர்களும் உறவுகளும், தமிழ் மக்களும் தமது உறவுகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவார்கள். இந்நிலையில் புதிய சட்டத்தை பயன்படுத்தி நினைவேந்தல்களை அடக்குவதற்கான - ஒடுக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொலிஸார் நீதிமன்றங்களை நாடி, தடை உத்தரவுகளைப் பெற்று, அது தொடர்பான அறிவித்தலை பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய பற்றாளர்களுக்கு வழங்கிவருகின்றனர்.

போராளிகள், தியாகிகள், மாவீரர்கள், தமிழ்த் தேசியவாதிகளுக்கு ஒவ்வொரு தமிழனும் அஞ்சலி செலுத்தும் நாளில் திட்டமிட்ட அடிப்படையில் இப்படியொரு தடையை ஏற்படுத்தி முயற்சிக்கும் மிகக் கேவலமான அரசாட்சியே இங்கு நடக்கின்றது.

மன்னாரில் மாவீரர் துயிலும் இல்லத்தின் பிரதான பொதுச்சுடர் ஏற்றிவைக்கும் பீடம் காடையர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது. நினைவுச் சின்னங்களை அடித்து நொருக்குவதால் தமிழ் மக்களின் உணர்வுகளை அடக்கிவிடலாம் என அரசோ, பாதுகாப்பு பிரிவினரோ அல்லது அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் காட்டிக்கொடுப்பாளர்களோ நினைத்துவிடக் கூடாது. அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

தமிழர்களின் போராட்ட வரலாற்றில் எங்கள் மண்ணுக்காக, இனத்தின் விடுதலைக்காக, பாதுகாப்புக்காக, சுதந்திரத்துக்காக போராடி மடிந்தவர்களை நினைவுகூருவதற்கான உரிமை ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்கின்றது. அதனை நீங்கள் தடுக்க முற்படக் கூடாது. - என்றார். (அ)

# சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நிதி

## அனந்தி குற்றச்சாட்டு

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் பொறுப்புக்கூறலைப் புறந்தள்ளும் அரசாங்கம், சர்வதேசத்தை ஏமாற்றும் நோக்கிலேயே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு 300 மில்லியன் ரூபாயை--- ஒதுக்கியுள்ளதாக முன் னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாங்கள் கேட்பது, சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பூர்வாங்க விசாரணையொன்றினை சர்வதேச மத்தியஸ்துடன் செய்ய வேண்டும் என்பதே ஆகும் என அனந்தி சசிதரன் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, அரசாங்கம் பொறுப்புக்கூறலை இதயசுத் தியுடன் செய்வதற்கு தயாராக வேண்டும் என்பதுடன் மக்களை ஏமாற்றும் செயல்பாடுகளை நிறுத்தவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# பஸிலின் பட்ஜெட்டை பாராட்டுகிறார் டிலான்

கொழும்பு, நவ. 23

"கம்பியில் சைக்கிள் சவாரி செய்வதுபோல, இக்கட்டான சூழ்நிலையாக இருந்தால்கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்."- என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா புகழாரம் சூட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு புகழாரம் சூட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா பெருந்தொற்றால் முழு உலகமும் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா துறைகளும் ஸ்தம்பித்துள்ளன. இந்நிலையில் இருந்து மீள்வதென்பது சவாலுக்குரிய விடயமாகும். இக்காலப்பகுதியில் பயணிப்பதென்பது கம்பிமீது சைக்கிள் சவாரி செய்வது போன்றதாகும். நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களுக்கு பாரிய சுமைகளை திணிக்காத, இருப்பவர்களிடமிருந்து வரிகளை அறவிடும் பாதீட்டை நிதி அமைச்சர் முன்வைத்துள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம்.

2022 ஆம் ஆண்டிலாவது அரசியல், கட்சி, இனம், மத பேதங்களை மறந்து இலங்கையர்களாக செயற்படுவோம். அப்போதுதான் முன்னோக்கி பயணிக்கக்கூடியதாக இருக்கும்-என்றார்.

# மாகாண சபையை பாதுகாக்க புதுடில்லி என்ன செய்யும்?

**பனங்காட்டான்**

சிங்கள தேச ஆட்சியாளர்களைப் பொறுத்தளவில் இந்த மாதம் (நவம்பர்) அவர்களுக்கு முக்கியமானது. அண்ணன் தம்பி என இருவர் கூட்டாகக் கொண்டா டும் மாதம் இது.

நவம்பர் 18ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள். 2019ஆம் ஆண்டு இதே திகதியில் தான் அரசியல்வாதி அல்லாத கோட்டாபய ராஜபக்ஷ ராணுவக் கோலுடன் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

2004இல் முதன்முறையாகப் பிரதமராகி முழுமையாக ஐந்து ஆண்டுகள் அப்பதவியை வகித்த பின்னர், 2018 ஒக்ரோபரிலிருந்து டிசெம்பர்வரை ஐம்பத்தாறு நாட்கள் மீண்டும் மரியாதையற்ற பிரதமர் கதிரையில் ஏற்றி இறக்கப்பட்ட மஹிந்த, மூன்றாவது தடவையாக பிரதமரானது நவம்பர் 21ஆம் திகதி.

இதனை எழுதும் வேளையில் இது தொடர்பான தகவலொன்று கொழும்பும் பத்திரிகையில் வந்துள்ளது. பல்வேறு உடல் உபாதைகளுடனும் அரசியல் அஜீரணங்களுடனும் அவதிப்படும் மஹிந்த அடுத்த மூன்று மாதத்துள் அரசியலிலிருந்து ஓய்வு பெறப்போகிறாரென அச்செய்தி தெரிவிக்கிறது.

கோட்டாபய பதவியேற்பின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அனுராதபுரத்திலுள்ள ருவன்வெலிசாயவிலுள்ள எட்டுத் தளங்களுக்கு மேலதிகமாக, பௌத்த பீடாதிபதிகளின் எதிர்ப்பையும் மீறி திறந்து வைக்கப்பட்ட ஒன்பதாவது தளத்தின் சாபமே மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பப் போவதாக சில சிங்கள இணையத் தளங்கள் எழுதியுள்ளன.

இதே சாபம் கோட்டாபயவுக்கும் இருப்பது போன்று கொழும்பில் சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற அரச எதிர்ப்புப் பேரணி காட்சி கொடுத்தது. தம்மை சிங்கள - பௌத்தர்களே ஆட்சிக்குக் கொண்டு வந்தார்களென்று மார்பு தட்டிய கோட்டாபயவின் முதுகில் பிடித்து அவர்களே தள்ளி வீழ்த்தும் வகையில் மக்கள் எதிரணி தென்பட்டதென்று ஊடகங்கள் சுட்டியுள்ளன.

இவரது பதவிக்காலம் முடிவடைய இன்னும் மூன்றாண்டுகள் இருக்கிறது. இப்போது அங்கு இடம்பெறும் விவசாயிகள் போராட்டம் குறித்து அண்மையில் கருத்துத் தெரிவித்த கோட்டாபய தமக்கேயுரிய பாணியில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

நான் நினைத்தால் விவசாயிகளின் கழுத்தைப் பிடித்து அவர்களைத் தோட்டத்தில் இறக்குவேன். இராணுவ ஆட்சியையும் என்னால் கொண்டுவர முடியும். ஆனால், நான் அவ்வாறு செய்ய விரும்பவில்லை என்பது அவரது கூற்றின் பொழிப்பு.

இக்கூற்றில் கவனிக்க வேண்டிய ஒரு வசனம் - நினைத்தால் இராணுவ ஆட்சியை கொண்டுவர முடியும் என்பது. இதனை விளக்குவதற்கு 1983இல் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தமிழர் உரிமைப் போராட்டம் குறித்துத் தெரிவித்த ஒரு கூற்றினை இங்கு ஒப்பிடவேண்டும்.

தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம் ஏவி விடப்பட்ட முக்கிய ஆரம்ப காலம் அது. தமிழர் மீது எதனையும் செய்யலாம் என்ற போக்கில்இராணுவத் தளபதியாகவிருந்த தமது மருமகனை யாழ்ப்பாணம் அனுப்பி மூன்று மாதத்துள் பயங்கரவாதத்தை ஒழிக்குமாறு ஜே. ஆர். உத்தரவிட்டிருந்தார்.

மாமனாரின் உத்தரவை சிரம் மேல் தாங்கி யாழ்ப்பாணம் சென்ற மருமகன் திஸ்ஸ (புள்) வீரதுங்க தமிழ் இளைஞரை சந்திகள் தோறும் சுட்டுத்தள்ளினார். சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட மனித உரிமை அமைப்புகள் இதனைப் பகிரங்கமாகக் கண்டித்தன.



கோப்புப் படம்: இந்திய உயர் ஸ்தானிகருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை

> **புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவர கோட்டாபய அரசு விரும்புவதன் முக்கிய காரணம் மாகாண சபைகள் முறைமையை இரத்துச் செய்வதே. 13ஆவது திருத்தத்தை முழுமையாக எதிர்பார்த்து இந்தியாவை முழுமையாக நம்பும் தமிழ்க் கட்சிகள் தமக்குள் பிளவுபடுகின்றன. இந்த விடயத்தில் இந்தியா என்ன செய்யப்போகின்றது?**

அவ்வேளை ஜே. ஆர். கூறியது இதுதான்: - பயங்கரவாதத்தை ஒழிப்பதையே எனது இராணுவம் செய்கிறது. தமிழரை எனது அரசு படுகொலை செய்யவில்லை. நான் நினைத்தால் தமிழரை ஒழித்துக்கட்ட என்னால் முடியும். ஆனால், நான் அப்படி நினைக்கவில்லை - இதுவே ஜே. ஆரின் கூற்று.

நினைக்காதவரை நல்லது. ஆனால், ஜே.ஆர். அதனை நினைத்தபோது என்ன நடந்தது? 1983 இனப்படுகொலை இதற்கான வரலாற்றுச் சாட்சி. ஜே. ஆர் நினைத்ததுபோல் ஜி. ஆர் (கோட்டாபய ராஜபக்ஷ) நினைப்பார் என்றால் என்ன நடைபெறும்? வெள்ளை வான் கடத்தல்கள், குண்டு வீச்சுகள், படுகொலைகள் சர்வசாதாரணமாக இடம்பெறும். இதுதான் இராணுவ ஆட்சி.

தெற்கில் அகமும் புறமும் இணைந்த சூழல் இவ்வாறாக இருக்கையில், தமிழர் தரப்பின் செயல்பாடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறுண்டு போகிறது.

தமிழ் அரசுக் கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும், இக்கட்சியால் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டு சட்டவாளர்களையும் கொண்ட குழு, தங்களுடன் இணைந்து செயற்படும் புகலிடங்களிலுள்ள சிலரையும் இணைத்துக் கொண்டு அமெரிக்காவில் இந்த வாரம் பேச்சு நடத்தியது. இக்குழுவுக்கு ஆரம்பத்தில் சட்டவாளர் குழு என பெயர் கூறப்பட்டது. ஆனால், இப்போது போனவர்கள் பலர் சட்டவாளர்கள் அல்ல, கட்சி ஆதரவாளர்களே.

2011ஆம் ஆண்டில் கூட்டமைப்புக் குழு அமெரிக்கா சென்றபோது வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை இம்முறை ஏனோ ஊடகங்கள் வழங்கவில்லை. கூட்டமைப்பு பிளவுண்ட நிலையில், அதிலுள்ள தமிழ் அரசுக் கட்சி தனித்து தனது ஆதரவாளர்களையும் இணைத்துக் கொண்டு சென்றது ஒரு காரணமாக இருக்கலாம். சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இயங்கிய உலகத்தமிழர் பேரவையின் உறுப்பினர் இதில் பங்கேற்றதும் இன்னொரு காரணமாக இருக்கலாம்.

திம்பு பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் சட்டவாளர் கே.வி.தவராஜா ஆகியோரை இக்குழுவில் இணைத்திருக்கலாமென்ற ஆதங்கம் பொதுவெளியில் உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், தற்செயலான நிகழ்வா அல்லது திட்டமிட்ட நிகழ்வா என்று கூறமுடியாதவாறு ரெலோவின் குழுவொன்றை கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹோல்ரன் சந்தித்து உரையாடியுள்ளார். தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த சம்பந்தனையும் சுமந்திரனையும் சில நாட்களுக்கு முன் னர் சந்தித்த இவர், தமிழர் தரப்பினரை தனித்தனியாக சந்திக்கும் நிகழ்ச்சி நிரலில் ரெலோவினரை சந்தித்ததாக சொல்லப்படுகிறது.

கூட்டமைப்புக்குள் இன்னொரு கிளைக் கூட்டமைப்பாக அல்லது கூட்டமைப்பு - 2 ஆக ரெலோ ஆகிவிட்டதா அல்லது ஆக்கப்படுகின்றதா என்று நோக்கக் கூடிய நிலையில் இவ்வாறான காரியங்கள் இடம்பெறுகின்றன. கட்சிகள், கூட்டுகள் எத்தனையானாலும் புதிய அரசியலமைப்பில் தமிழரின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றம், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13ஆவது திருத்த நிறைவேற்றம், வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையை முழுமையாக செயல்படுத்துவது என்பதுவே அனைவரதும் பேச்சுக் கருப்பொருளாக உள்ளது.

தமிழர் தரப்புகளுடன் பேசவும், இலங்கை அரசுடன் பேச்சுகளை தொடரவும் உலக நாடுகளுக்குத் திறந்திருக்கும் ஒரேயொரு கதவு 13ஆவது திருத்தமும் மாகாண சபையுமே. ஆனால், இவ்விடயத்தில் இலங்கை இன்னும் மதில்மேல் பூனையாகவே இருக்கிறது. மஹிந்தவின் முன்னைய ஆட்சியின்போது ஜே.வி.பி. தொடுத்த வழக்கின் அடிப்படையில், திருத்தப்படக்கூடிய சட்டப்பிரிவொன்றைக் காரணம் காட்டி உச்சநீதிமன்றம் வடக்கையும் கிழக்கையும் இரண்டாக்கி தனித்தனி மாகாண சபைகளாக்கிவிட்டது.

காணி நிர்வாகம், காவற்துறை நிர்வாகம் ஒருபோதுமே கிடையாது என்று 30 வருடங்களாக ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் அறிவித்து விட்டன. இது போதாதென்று தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் தமிழரின் பூர்வீக நிலங்கள் சிங்கள மயமாக்கப்படுகின்றன.

இவைகளைப் பார்த்து வாளாவிருக்கும் இந்தியத் தரப்பு மாகாண சபையை முழுமையான அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவதே தங்களின் நிலைப்பாடு என்று கூறுவதை எவ்வாறு நம்ப முடியும்?

தமிழர் தரப்பு ஒன்றுபட்டு ஒரு குரலில் நின்றால் மட்டுமே உரிமைகளைப் பெற முடியுமென்று நுனி நாக்கால் ஆலோசனை கூறும் இந்தியாவும் அதன் அணி சேர் நாடுகளும், செயல்பாட்டில் அவ்வாறு இயங்காது தமிழர் தரப்பினரை தனித்தனியாக சந்திப்பதால் எவ்வாறு ஒற்றுமை ஏற்படும்?

போதாக்குறைக்கு, கூட்டமைப்பு இரண்டாகி வருவது போன்று, கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய முன்னணியையும் இரண்டாக்க முனைவதை தமிழ் ஊடகங்கள் விபரமாக தெரிவிக்கின்றன. இவையெல்லாம் மாகாண சபைக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் என்ற காதலால்தான்.


புதிய அரசியலமைப்பொன்று வருமானால் அதில் மாகாண சபை முறைமை இல்லாமல் போகும் அபாயமுண்டு. இது இந்தியாவுக்கு நன்கு தெரியும். கூட்டமைப்பின் சம்பந்தனுக்கும் தெரியும். இவ்விடயத்திலாவது தமிழர் நிலைமையைப் புரிந்து இணைந்தியங்கும் சாத்தியம் எவரிடமும் இல்லை.

நல்லாட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது மறந்தும் முழுமையான இலங்கையின் விவகாரங்களில் சம்பந்தப்படாத சம்பந்தன், இப்போது நாட்டில் இனி என்ன நடைபெறப் போகிறதென எதிர்வு கூற முடியாதிருப்பதாக கரிசனை மிகுந்த கவலையுடன் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியத்துக்கும், தமிழர் பூர்வீக நிலத்துக்கும், மாகாண சபைக்கும் என்ன நடந்தாலும் என்ன, தமிழர் தரப்பு எத்தனை கூறுகளாகப் பிரிந்தாலும் என்ன என்றிருக்கும் சம்பந்தனின் போக்கு பற்றி "ஈழநாடு" தினசரி தனது அப்புக்குட்டி அண்ணை டவுட் என்னும் தலைப்பிலான கருத்துச் சித்திரத்தில் தெரிவித்துள்ள பின்வரும் வாக்கியத்துடன் இப்பத்தியை நிறைவு செய்வது பொருத்தமானது.

**சம்பந்தன்:** ஆட்சியில் அமர்த்திய சிங்கள மக்களாலேயே கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் விரட்டியடிக்கப்படும் காலம் உருவாகின்றது.

**அப்புக்குட்டி அண்ணை:** யார் ஆட்சியில் இருந்தால் நமக்கென்ன ஐயா. அடுத்த தேர்தலில் கூட்டமைப்பு எப்படி வெல்லுறது எண்ட வழியைப் பாருங்கோ. அதுசரி, ஆட்சியை மாற்றுகிற அலுவலுக்காகத்தான் உங்கட தளபதி அமெரிக்கா போயிருக்கிறார் எண்டதைத்தானே சொல்ல வாறியள்.



உலகில் அவதரித்த அவதாரங்களில் பிறப்பிடங்களைவிட, அவர்கள் மகா சமாதியடைந்த ஸ்தலங்கள்தான் மிகவும் சக்திவாய்ந்தவை. புட்டபர்த்தியிலுள்ள பாபாவின் மகா சமாதியானது பிரசாந்தி நிலையம், அது ஒரு புனிதமான தெய்வீக அதிர்வலைகளைக் கொண்டது. அங்கு அவர் மறைந்துவிடவில்லை. மறைந்திருந்து புதுமைபுரிகிறார்

எஸ்.டி.எஸ். உதயநாயகம்

# பக்தர்களின் இதயங்களில் வாழும் பாபா!

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா இன்றும் இன்னமும் ஒவ்வொரு சாயி பக்தனின் இதயங்களில் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார். நவம்பர் 23ஆம் திகதி, செவ்வாய் கிழமை அவரது 96ஆவது ஜெனனதினம். உலகில் வாழும் கோடிக் கணக்கான சாயி பக்தர்களுக்கு அவர் சாட்சாத் தெய்வமே! அவரிடத்தில் உலகிலுள்ள பக்தர்கள், இன்றும் ஆன் மீகத்தொடர்புடன் தானிருக்கிறார்கள். அவரும் பல லீலைகளைச் செய்து கொண்டுதானிருக்கிறார்.

கொடிய நோயின் தாக்கம், உலகமெங்கும் பரவியுள்ளது. பயம் ஒரு பக்கம் வாட்டுகிறது. பொருளாதாரம் மறுபக்கம் தாக்குகிறது. இன்று எதையோ இழந்த உணர்வில் பல பக்தர்கள் இருக்கின்றனர். ஆனால் பாபா எம்முடன் தானிருக்கிறார் என்பதை, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நமக்கு விட்டுச் சென்ற, பாரம்பரியமான அன்பையும் சேவையையும் புரிந்துகொண்டால், சோர்வடைந்த மனதுக்கு முழுத்தெளிவு கிடைக்கும்.

நம் கண்முன்னே வாழ்ந்து, மகா சமாதியான மகாபுருஷர் இவர்தான். இவரது முதல் அவதாரமான, சீரடி சாயி பாபா வாழ்ந்த காலத்தில், நாம் வாழ்ந்ததில்லை. அயோத்தியில் இராமனும், துவாராகாபுரியில் கண்ணனும் வாழ்ந்த காலத்தில், வாழ்ந்த அதிர்ஷ்டமான மானிடரைவிட, நாம் பல மடங்கு அதிஷ்டசாலிகள். காரணம்! சாயி பக்தர்களுக்கு, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா இராமராகவும் கிருஷ்ணராகவும் மட்டுமல்ல அனைத்து தெய்வங்களின் சொரூபமாகவும் காட்சியளித்தார்.

உலகில் அவதரித்த அவதாரங்களில் பிறப்பிடங்களைவிட, அவர்கள் மகா சமாதியடைந்த ஸ்தலங்கள்தான் மிகவும் சக்திவாய்ந்தவை. புட்டபர்த்தியிலுள்ள பாபாவின் மகா சமாதியானது பிரசாந்தி நிலையம், அது ஒரு புனிதமான தெய்வீக அதிர்வலைகளைக் கொண்டது. அங்கு அவர் மறைந்துவிடவில்லை. மறைந்திருந்து புதுமைபுரிகிறார். ஒரு சிலருக்கு அதிர்ஷ்டவசமாகக் காட்சியளித்துமிருக்கிறார். உண்மையான பக்தியும், பிரேமையும், நம்பிக்கையும், பொறுமையும் இருந்தால், அதனை நாமும் அனுபவிக்கமுடியும்.

சாயி அவதாரத்தின் தோற்றம் அன்பின் வடிவம். அவர் சாயி பக்தர்களின் இதயங்களில் அன்பின் ஒளியையேற்றினார். அன்றாட வாழ்க்கையில். அந்த ஒளியானது, மற்றவர்களுடன்



இன்று 96 ஆவது பிறந்த தினம்

பரிமாறிக்கொள்ளத் தூண்டியது. சாயி சமுதாயத்தில் மாற்றம் ஏற்படச் செய்தது. லட்சக்கணக்கானவர்கள் பாபாவின் அன்பினால் உந்தப்பட்டதனால், உலகளாவிய நிலையில் “செயல்படும் அன்பாக” அது ஆகியுள்ளது. அன்புதான் பகவானின் மிகப்பெரிய அருட்கொடையாகும். மனிதமேன்பாட்டு கல்வி முறையை அறிமுகப்படுத்தியவர் பாபாவேதான். பலபேர் மனித உயர்பண்புகளை ஆதாரமாகக் கொண்டு கல்வித் திட்டங்களை பேசியிருக்கலாம். ஆனால் நடைமுறைப்படுத்திய பெருமை பாபாவைத்தான் சேரும். சாயி பல்கலைக்கழங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கல்வி மிகவும் தனித்தன்மை வாய்ந்தது. பாபாவின் கல்வி திட்டம் வாழ்வதற்கானது, சம்பாதிப்பதற்கானதல்ல. இந்தக் கல்வி பாரம்பரியம், பகவான் மனிதகுலத்தின் எதிர்காலத்திற்காகக் கொடுத்த அருட்கொடையாகும். இந்தப் பாரம்பரியங்கள் இருக்கும்வரை பாபா வாழ்ந்துகொண்டுதானிருப்பார். வருடாவருடம் அவரின் பிறந்தநாள் வரத்தான் செய்யும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையம் ஏற்பாட்டில், இன்று செவ்வாய்க்கிழமை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96ஆவது பிறந்தநாள், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள, சாயி நிலையத்தில், காலை 5 மணி தொடக்கம் பகல் ஆராத்தி வரை சுகாதார ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் நடைபெறவுள்ளது. சிறப்பு அம்சமாக பிறந்த நாள் கேக் வெட்டுதல், திருவூஞ்சல், திரிமங்களாராத்தியும் இடம்பெறும். ■

# தடுப்பூசிக் கவசம் உடைகின்றதா?

## ஐரோப்பிய ‘கோவிட்’ அனுபவங்கள் ஏனைய நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கை



பாரிஸிலிருந்து குமாரதாஸன்

உள்ளூர் தொற்றுநோயாக தன்னை நிலைநிறுத்த முயலும் கொரோனா ஐரோப்பாவில்-குறிப்பாகத் தங்கள் மக்களுக்குத் தடுப்பு மருந்தை விரைந்து வழங்கத் தொடங்கிய வசதி படைத்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் - தோன்றியுள்ள“கோவிட்” நிலைவரம் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் தடுப்பூசி ஏற்றுவதை வேகமாக முன்னெடுத்த சில நாடுகள் எண்பது வீதத்துக்கு மேல் அதன் இலக்கை எட்டமுடிந்தது. அதனால் தொற்றின் வேகமும் உரிழப்புகளும் குறைந்தன. மருத்துவமனைகள் அவற்றின் நெருக்கடிகளில் இருந்து விடுவிக்கப்பட்டன.

தலைவர்கள் தத்தமது நாடுகளைக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கும் உரைகளை உற்சாகமாக நிகழ்த்தினர். மீண்டும் உணவகங்களில் சாப்பிடும் கூட்டம் அதிகரித்தது.கைலாகு, கட்டியணைப்பு, முத்தம் பரிமாறல் என்று சமூகம் மீண்டும் இடைவெளி இன்றி இரண்டறக் கலந்தது.

அத்தியாவசியம் என்று இருந்த மாஸ்க் ஓர் அருவருப்பான பொருளாகியது. ஆனால் இலையுதிர் காலத்தில் நிலைமை மீண்டும் தலைகீழாக மாறத் தொடங்கியது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் தடுப்பூசி திட்டங்களைக் கவர்ச்சிகரமாக முன்னெடுத்த சில நாடுகளில் வைரஸ் தொற்று மீண்டும் உச்சங்களைத் தொட்டிருக்கிறது.

நத்தார் கொண்டாட்டங்களையும் விடுமுறைப் பயணங்களையும் அச்சுறுத்துகின்ற அளவுக்கு தொற்று மீண்டும் தீவிரமாக மேலெழுந்துள்ளது. மக்கள் நடமாட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவர மீண்டும் சட்டங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. நெதர்லாந்து, ஆஸ்திரியா போன்றன பொதுமுடக்கத்தை ஒத்த பல பதில் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. அவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் வெடித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் முதல் நாடாக ஆஸ்திரியா தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி கட்டாயம் என்ற முடிவை எடுக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

### ஏன் இந்த நிலைமை?

பைசர் போன்ற தடுப்பூசிகள் உயிரிழப்புகளையும் நோயின் தீவிரமான நிலையையும் குறைத்தாலும் அடுத்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அவற்றின் எதிர்ப்புத்திறன் குறைவதை சமீபத்திய ஆய்வுகள் நிரூபித்துள்ளன. ஆரம்பத்தில் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களின் உடலில் நோய் எதிர்ப்புத் திறன் படிப்படியாகக் குறைந்து அவர்கள் மீண்டும் தொற்றுக்கு ஆளாகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

எல்லா நாடுகளிலும் முதியவர்களுக்கே முதலில் முன்னுரிமை அடிப்படையில் ஊசி ஏற்றப்பட்டது.அவர்கள் ஆறு மாத காலத்தைக் கடந்த பிறகு புதிதாகத் தொற்றுக்கு இலக்காகி மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு எதிரான போரில் ஒரே ஆயுதமாக நம்பப்பட்டவை தடுப்பூசிகள். ஆனால் முதல் இரண்டு தடுப்பூசிகள் வழங்கிய நோய்க் காப்பு (immune protection) பலவீனமடைந்து வருவதை ஐரோப்பிய நிலவரம் உணர்த்துவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

எல்லா நாடுகளிலும் சமூகத்தில் தடுப்பூசி ஏற்றாதோர் என்ற ஒரு சிறு பிரிவினர் உள்ளனர். அவர்கள் மூலமாகத் தொற்று ஏனையோருக்கு விரிவடைகிறது.உதாரணமாக ஐரோப்பாவில் மிக உச்ச அளவில்(89.1%) தடுப்பூசி செலுத்திய நாடு அயர்லாந்து. ஆனால், அங்கு அண்மையில் புதிய தொற்றுக்கள் காரணமாக இரவில் நடமாட்டக் கட்டுப்பாடுகளை அறிவிக்கவேண்டி வந்தது.

தடுப்பூசி ஏற்றாத சிறு கூட்டத்தினரிடையே வைரஸ் மறைந்து வாழ்ந்து நிலைமைக்கு ஏற்பத் தன்னைத்தக்கவைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறது. உள்ளூர் நிலைமைக்கு ஏற்பஆங்காங்கே அது வடிவங்களை எடுத்துநிலைகொள்கிறது. டெல்டாவின் புதிய உப திரிபுகள் அதற்கு உதாரணமாகின்றன என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

### மூன்றாவது டோஸ் இறுதி ஆயுதமா?

வசதி படைத்த நாடுகள் மூன்றாவது தடுப்பூசி மூலம் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என நம்பி அதற்கான திட்டங்களில் இறங்கி உள்ளன. ஆனால், உலகில் முக்கால் பங்கு நாடுகளில் இன்னமும் முதல் தடுப்பூசி கூட செலுத்தி முடிக்கப்படவில்லை. இவ்வாறு தடுப்பூசிச் சமத்துவமின்மை நிலவும் உலகில் கொரோனா வைரஸை மனித குலம் வெற்றிகொள்ளப்போவதில்லை என்பதை உலக சுகாதார அமைப்பு இடித்துரைத்துவருகிறது.

ஐரோப்பாவில் மட்டும் மேலும் ஐந்து லட்சம் உயிரிழப்புக்களுக்கு வாய்ப்பிருப்பதாக அது மதிப்பிட்டுள்ளது. தற்சமயம் பரவலாகப் பேசப்படுகின்ற “தடுப்பூசியின் நோய்க்காப்பு வீழ்ச்சி” (vaccine immunity waning) என்பது கொரோனாப் போரில் வெல்வதற்குத் தடுப்பூசி மட்டும் போதாது என்ற கவலைக்குரிய முடிவைப் பகிரங்கமாகக் கூறவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி உள்ளது.மாஸ்க், சமூக இடைவெளி போன்ற பழக்கவழக்கங்கள் நிலையான பாதுகாப்புக்காக இனியும் தொடரப்படவேண்டும் என்று நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

தங்கள் சனத்தொகையினருக்கு தொட்டு தொட்டாக - ஒரு சீரான ஒழுங்கின்றி- தடுப்பூசி செலுத்தி வருகின்ற நாடுகளில் மிக வேகமாக ஊசியின் நோய்க் காப்பு இழக்கப்படும் வீதம் அதிகமாக இருக்கும். அத்தகைய நாடுகளில் மூன்றாவது ஊசி ஏற்றும் வசதிகள் சமீப காலத்தில் நிறைவேற்றப்பட வாய்ப்பில்லை. எனவே அந்நாடுகளில் டெல்டா போன்ற வடிவங்கள் உள்ளூார் மட்டத்தில் தொடர்ந்து பரவும் ஆபத்துக் காணப்படுகிறது.

முதல் கட்டத் தடுப்பூசி செலுத்துவதில் இன்னமும் ஆரம்ப நிலையில் இருக்கின்ற வறிய நாடுகள், ஐரோப்பாவில் வழமை திரும்பி விட்டதாக எண்ணித் தத்தமது நாடுகளைத் திறந்துவிடுவதில் மும்முரமாக உள்ளன. ஆனால் ஐரோப்பாவின் உண்மையான நிலைவரம் அந்த நாடுகளுக்கு ஒரு “முன்னெச்சரிக்கை” என்பதை சில நிபுணர்கள் நினைவூட்டுகின்றனர். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

44) சேனைகளில் செய்கை பண்ணும் பயிர் அல்லாதது எது?
(1) எள்ளு (2) நெல் (3) இறுங்கு

45) கலாநிதி ஆனந்தகுமாரசுவாமியால் எழுதப்பட்ட நூல் எது?
(1) தேசிய தாலாட்டு
(2) தேசிய எதிர்பார்ப்புகள்
(3) அறிவுரைமுத்துச்சரம்

46) மாப்பொருள் உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படத்தக்க நோய் எது?
(1) இரப்பையழற்சி (2) பருத்தஉடல் (3) நீரிழிவு

47) புகையூட்டுவதன் மூலம் பாதுகாக்கப்படும் உணவு எது?
(1) கருவாடு (2) பனங்கிழங்கு (3) மீன்

48) பயிர்ச்செய்கைக்குச் சாதகமான பிராணி எது?
(1) வண்டு (2) ஆந்தை (3) ஓணான்


49) நீர் வடிகட்டியொன்றைத் தயாரிப்பதற்கு அவசியமற்றது எது?
(1) களிமண் (2) பிளாத்திக்குப்போத்தல் (3) பஞ்சுத்திரள்

50) திசைகாட்டியைப் பயன்படுத்துவோர்
(1) விளையாட்டு வீரர்கள் (2) பேராசிரியர்கள் (3) நாடோடிகள்

51) எமது அடிப்படைத் தேவைகளுள் அடங்காதது எது?
(1) நீர் (2) போக்குவரத்து (3) பாதுகாப்பு

52) நோய்க்காவிகளான ஆட்கள் மூலம் பரவும் நோய் எது?
(1) சின்னமுத்து (2) வாந்திபேதி (3) சீதபேதி

53) இதில் உள்ள மின்குமிழை ஒளிரச் செய்வதற்கு A என்ற இடத்தில் பயன்படுத்தக்கூடிய பொருள் எது?
(1) கடதாசி
(2) இறப்பர்
(3) நாணயக்குற்றி




54) புளியமர இலையை ஒத்த இலை எது?
(1) கத்தாப்பு (2) அகத்தி (3) ஆமணக்கு

55) சூழல் மாற்றத்தை அறிவிக்கும் பிராணி அல்லாதது எது?
(1) பருந்து (2) குரங்கு (3) சேவல்

56) நீர் நிரம்பிய நிறைகுடமொன்றினை முன்னே வைக்கும் சமயப் பண்பாட்டு வழக்கத்தைக் கொண்டவர்கள்
(1) தமிழர்கள் (2) சிங்களவர்கள் (3) முஸ்லிம்கள்

57) மீனெண்ணெயில் அடங்கியுள்ள போசனைக்கூறு எது?
(1) விற்றமின் A (2) கல்சியம் (3) விற்றமின் D

58) இரண்டு மாவட்டங்களை மட்டும் கொண்டுள்ள மாகாணங்கள் எவை?
(1) தென்மாகாணம், வடமத்திய மாகாணம்
(2) வடமேல் மாகாணம், ஊவாமாகாணம்
(3) சப்பிரகமுவ மாகாணம், மத்திய மாகாணம்

59) சட்டக்காந்தங்களின் முனைவுகள் அருகருகே கொண்டுசெல்லப்பட்டன. அப்போது இரண்டு காந்தங்களும் ஒன்றினையொன்று தள்ளுவதனை அவதானிக்க முடிந்தது. அதற்காக இரண்டு காந்தங்களும் அருகருகே வைக்கப்பட வேண்டிய சரியான விதத்தினைக் காட்டும் உரு எது?
(1) [S N] [S N] (2) [N S] [N S] (3) [S N] [N S]

60) “நெகிழிகளைக் கண்டபடி சூழலில் கைவிடுவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள்” என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.

(i) ........................................................................................................
........................................................................................................
(ii) ........................................................................................................
........................................................................................................
(iii) ........................................................................................................
........................................................................................................

# மலையகத்தில் 8 மாதங்களில் 11 பெண்கள் படுகொலை!

## 12 பாலியல் வன்முறைகள்; 94 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

கண்டி, நவ. 23

இவ்வருடத்தின் முதல் 8 மாத காலப் பகுதியில் மத்திய மாகாணத்தில் 11 பெண்கள் கொலை செய்யப் பட்டிருப்பது டன் குறித்த அதே 8 மாத காலத் தில் 94 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் பதிவாகியிருப்ப தாக மத்திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ் வருடம் ஜனவரி முத லாம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையி லான முதல் 8 மாத காலத்தில் இச் சம்பவங்கள் பதிவாகியிருப் பதாக மத்திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உத விப் பொலிஸ் அதிகாரி திருமதி ஜானகி செனவிரத்ன இத் தக வல்களைத் வெளியிட்டார்.

குறித்த 8 மாத காலத்தினுள் சிறுவர்களைத் தாக்கிக் காயப் படுத்திய 27 சம்பவங்கள் மத்திய மாகாணத்தில் பதிவாகியுள்ளன.

மாத்தளை பொலிஸ் பிரி வில் சிறுவர்களை தாக்கிக் காயப்படுத்திய சம்பவங்கள் 9 உம், கண்டி பொலிஸ் பிரிவில் 8 உம் பதிவாகியிருக்கும் நிலை யில், கம்பளை பொலிஸ் பிரி வில் அத்தகைய சம்பவங்கள் எதுவும் பதிவாகாமை விசேட அம்சமாகும்.

இக்காலப் பகுதியில் பெண் கள் மீதான 12 பாலியல் வன் முறைச் சம்பவங்கள் பதிவாகி யுள்ளன. இதே காலப் பகுதியில் 11 பெண்கள் கொலை செய்யப் பட்டிருப்பதுடன் இவற்றில் 4 கொலைச் சம்பவங்கள் நுவரெ லியா பொலிஸ் பிரிவில் பதிவாகி யுள்ளன. கண்டி பொலிஸ் பிரி வில் பெண்கள் கடத்தப்பட்ட சம் பவங்கள் 4 பதிவாகியுள்ளன.

இவை இவ்வாறிருக்க, கொரோனா வைரஸ் பரவல் நிலை காரணமாக பாடசாலை கள் மற்றும் தனியார் வகுப்புகள் என்பன இடம் பெறாதிருந்த பின் னணியில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இலக் கான சம்பவங்கள் பெற்றார்க ளின் பாதுகாப்பில் பிள்ளைகள் இருந்த காலத்தில் என்பதையும் இது தொடர்பில் பெற்றோர் கள் விசேட கவனம் செலுத்து தல் அவசியம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பலரிடம் இவ் விவ காரம் தொடர்பில் வினவிய போது அவர்களில் பெரும் எண் ணிக்கையிலானோரிடம் தொலைப்பேசி வசதிகள் எது வும் இல்லாதிருந்தமை தெரிய வந்ததாகவும், துஷ்பிரயோகத் திற்குள்ளான சிறுவர் மற்றும் சிறுமிகள் பலரும் பாதிக்கப்பட் டிருப்பது அவர்கள் தமது தாய் அல்லது தந்தையின் தொலை பேசிகளின் மூலம் வெளி நபர்க ளுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளின் மூலம் என்பது தெரியவந்திருப்பதாகவும் மத் திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அதிகாரி திருமதி ஜானகி செனவிரத்ன மேலும் கூறினார். (இ)

# நினைவேந்தல் உரிமையை எவரும் தடுக்கவே முடியாது!

## சஜித் தெரிவிப்பு



கொழும்பு.நவ. 23

**“இலங்கையில் போரின்போதும் வன்முறைகளின் போதும் உயிரிழந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர் களை - அவர்களின் உறவுகள் நினைவேந்தும் உரி மையை எவரும் தடுக்கவே முடியாது.”**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படு வதற்கு நீதிமன்றங்கள் ஊடான தடையுத்தரவைப் பொலிஸார் பெற்று வருகின்றனர். இது இந்த அரசின் திட்டமிட்ட செயல் என்று தமிழ் அரசியல்வாதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நல்லாட்சி அரசில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆட்சியில் அனுமதி ஏன் மறுக்கப்படுகின் றது எனவும் தமிழ் அரசியல் வாதிகள் சீற்றத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஊடகவிய லாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

“இலங்கையில் கடந்த காலங்களில் போரின்போதும் வன்முறைகளின்போதும் பலர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களை இன ரீதி யிலோ அல்லது மத ரீதியிலோ பிரித்துப் பார்க்கக்கூடாது. அனைவரும் மனிதர்கள்.

உயிரிழந்தவர்களின் வலி அவர்களின் உறவுகளுக்குத்தான் தெரியும். அதில் எவரும் அரசியல் நடத்தக்கூடாது.

உயிரிழந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை, அவர் களின் உறவுகள் நினைவேந்து வதை எவரும் தடுக்கவே முடி யாது” - என்றார். (இ)

# விடுதி முற்றுகை; மூவர் சிக்கினர்!

கொழும்பு, நவ. 23

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குடாபாடுவ பிர தேசத்தில் விபசார விடுதி யொன்று சுற்றிவளைக்கப்பட் டுள்ளதுடன் மூவர் கைதுசெய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரி வித்துள்ளது.

விபசார விடுதியை நிர்வ கித்து வந்த 40 வயது நபரும், விபச்சார விடுதியை நடத்திச் செல்வதற்கு உடந்தையாக இருந்த 37, 52 வயதுகளை யுடைய இரு பெண்களுமே இதன்போது கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

குறித்த மூவரும் நீர்கொழும்பு, கம்பஹா, மொரட்டுவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

நீர்கொழும்பு குற்றப் புல னாய்வுப் பிரிவினர் மேற் கொண்ட விசேட சுற்றிவளைப் பின்போதே மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

## பண்டிகைக் காலங்களில் சந்தைக்கு

# வெதுப்பக பொருட்களை வழங்குவதில் சிக்கல்

கொழும்பு, நவ. 23

கோதுமை மாவின் தட்டுப்பாடு காரணமாக வெதுப்பக உற்பத்தி யாளர்கள் கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா விநியோக நிறுவனங்களால் வழங்கப்படும் கோதுமை மாவின் அளவு சுமார் 25 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ள தாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், வெதுப்பக பொருட்களும் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் சந்தைக்குப் வெதுப்பக பொருட் களை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் பேக்கரி உரிமையா ளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார். (இ)



# காய்கறிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 23

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்குக் கிடைக் கும் காய்காறிகள் குறைவடைந் துள்ளன என்று அதன் முகா மைத்துவம் தெரிவித்துள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு நேற்று முன்தினம் நான்கரை இலட்சம் கிலோகிராம் காய்கறிகள் மாத் திரமே கிடைத்துள்ளன.

இது சாதாரணமாக சந் தைக்குக் கிடைக்கும் தொகையை விட 80 வீதம் குறைவான காய்கறி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலை யத்துக்குத் தினமும் 25 இலட் சத்துக்கும் மேற்பட்ட கிலோ கிராம் காய்கறிகள் கிடைப்ப துண்டு.

பசளை பிரச்னை மற்றும் கன மழையுடன் கூடிய கால நிலை காரணமாக காய்கறி விவசாயம் பாதிக்கப்பட்டுள் ளது என விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

இதன் காரணமாக எதிர்வ ரும் நாட்களில் காய்கறிகளுக் குப் பெரும் தட்டுப்பாடு ஏற் படலாம் எனக் கூறப்படுகின் றது.

# 180 மி.லீற்றர் கொள்ளளவு கொண்ட மதுபானப் போத்தல்களுக்கு தடை

எதிர்காலத்தில் 180 மில்லிலீற்றர் கொள்ளளவு கொண்ட சிறிய மதுபானப் போத்தல்களுக்கு தடை விதிக்க சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள் ளது.

பயன்பாட்டுக்குப் பிறகு சுற்றுச்சூழலில் இவை வீசப்படுவதைத் தடுக்கும் முகமாகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி, 100 மில்லியனுக்கும் அதிகமான சிறிய போத்தல்கள் தனிநபர்களால் பயன்படுத்தப்பட் டுள்ளன என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, பாவனையின் பின்னர் 100 சத வீத போத்தல்கள் சுற்றுச்சூழலில் வீசப்படுவதாக வும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், இந்தப் போத்தல்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்க ளால் மீள்சுழற்சி செய்யப்படுவதோ அல்லது மீண் டும் அவற்றை சேகரிக்கும் செயற்பாடுகளோ முன்னெ டுக்கப்படுவதில்லை எனவும் சுற்றாடல் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (இ)




## அணிவகுப்பில் புகுந்தது கார் ஐவர் உயிரிழப்பு; 40 பேர் காயம்!

### அமெரிக்காவில் பயங்கரம்

நியூயோர்க், நவ. 23

அமெரிக்காவில் கிறிஸ்மஸ் ஊர்வலத்தில் எஸ். யு. வி. கார் ஒன்று புகுந்து தாறுமாறாக ஓடியதில் ஐவர் உயிரிழந்தனர். 40 பேர் வரையானோர் காயமடைந்தனர்.

அமெரிக்காவின் விஸ்கான்ஸின் நகரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 4. 30 மணியளவில் இச்சம்பவம் நடந்துள்ளது.

விஸ்கான்ஸின் மாகாணத்தின் புறநகர்ப் பகுதியான மில்வூகீயில் ஆண்டுதோறும் கிறிஸ்மஸ் ஊர்வலம் நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் ஞாயிறன்று நடைபெற்ற ஊர்வலத்தின் போது திடீரென சிவப்பு நிற எஸ் யு. வி. ரக கார் ஒன்று கூட்டத்திற்குள் புகுந்து தாறுமாறாக ஓடியது. இதில் சிறுவர்கள் உட்பட ஐவர் உயிரிழந்தனர். 40 பேர் வரை காயங்களுக்கு உள்ளாகினர். இவர்கள் அனைவரும் நகரில் உள்ள 6 வெவ்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் வாகனத்தை துப்பாக்கியால் சுட்டு நிறுத்தியிருந்தனர். ஆனால், வாகனத்தை செலுத்தியவர் தப்பியோடி விட்டார் என்று கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதல் பயங்கரவாதத் தாக்குதலா என்பது குறித்தும் விசாரணை இடம்பெறுவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## மூன்று வார பொதுமுடக்கம் ஆஸ்திரியாவில் நடைமுறை!

வியன்னா, நவ. 23

ஐரோப்பா முழுவதும் மீண்டும் எழுச்சியடைந்து வரும் கொரோனா தொற்று நெருக்கடிக்கு மத்தியில் ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவில் முழுமையான முடக்க நிலை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

நேற்று முதல் 3 வாரங்களுக்கு முடக்க நிலை அமுலில் இருக்கும். இக்காலப்பகுதியில் ஆஸ்திரியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன், அத்தியாவசியமற்ற வணிக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

கொரோனாப் பெருந் தொற்றின் நான்காவது மற்றும் ஐந்தாவது அலையை பல ஐரோப்பிய நாடுகள் எதிர்கொண்டுள்ள நிலையில் உலகில் முதல் நாடாக ஆஸ்திரியா கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதைக் கட்டாயமாக்கியுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வருவதாக அரசாங்க அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஏற்கனவே தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான முடக்க நிலை ஆஸ்திரியாவில் நடைமுறைப் படுத்தப்பட்டது. நவம்பர் 15ஆம் திகதி அமுலுக்கு வந்த புதிய விதிகளின் பிரகாரம் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் அல்லது கொரோனாத் தொற்றுக்கு ஆளாகிக் குணமடைந்தவர்கள் தவிர 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அவசிய தேவைகள் அன்றி வீடுகளைவிட்டு வெளியே வர முடியாது என உத்தரவிடப்பட்டது.

இதனை மீறுவோருக்கு 500 முதல் 1,450 யூரோ வரை அபராதம் விதிக்கப்படும். அத்துடன், புதிய விதிமுறைகளை மீறும் வர்த்தக நிறுவனங்களுக்கு 30,000 யூரோ வரை அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து இன்று முதல் முழு நாட்டையும் முடக்கு அறிவிப்பு வெளியானது.

இதேவேளை, ஐரோப்பாவில் சில நாடுகளில் மீண்டும் கொவிட் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டு வரும் நிலையில் இதனை எதிர்த்து பெரும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆப்கானில் பட்டினி சாவின் பிடியில் 10 இலட்சம் சிறுவர்!

### யுனிசெவ் அமைப்பு கவலை

காபூல், நவ. 23

ஊட்டச்சத்து குறைவு, பட்டினி, வறுமை ஆகியவற்றால் ஆப்கானிஸ்தானில் சாவின் விளிம்பில் 10 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் இருப்பதாக யுனிசெவ் கவலை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த ஓகஸ்ட் மாதம் அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறிய பின் தலிபான்கள் பிடிக்குள் அந்த நாடு வந்தது. தலிபான்கள் இடைக்கால முஸ்லிம் இராச்சிய ஆட்சியை உருவாக்கியுள்ளதாக அறிவித்தனர்.

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின் ஆப்கானிஸ்தான் பொருளாதாரம் நாளுக்கு நாள் பெரும் சரிவைச் சந்தித்து வருகிறது. அத்தியாவசிய பொருட்கள் கடும் விலை ஏற்றம், வேலைவாய்ப்பின்மை, வறுமை, பட்டினி போன்றவை அங்கு மீண்டும் தீவிரமடைந்துள்ளது. ஐ. நா. மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் மட்டும் மனிதநேய அடிப்படையில் உதவிகளை வழங்கி வருகின்றன.

ஆப்கானிஸ்தானில் வாழும் மக்களில் 95 சதவீதம் பேருக்குப் போதுமான உணவு இல்லை. 2.30 கோடி மக்கள் பட்டினியின் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். யுனிசெவ் அறிக்கையின்படி, ஆப்கானிஸ்தானில் 1. 40 கோடி சிறுவர்



களுக்கு உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது, 50 இலட்சம் சிறுவர்கள் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் டோலோ சேனலுக்கு யுனிசெவ் ஆதரவு மற்றும் மக்கள் நலக் குழுவின் தலைவர் சாம் மோர்ட் அளித்த பேட்டியில், “சர்வதேச உலக சிறுவர் தினம் கொண்டாடுகிறோம். ஆனால், ஆப்கனில் கொண்டாட முடியாது, அங்கு சிறுவர்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது.

1.40 கோடி சிறுவர்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர். 30 இலட்சம் சிறுவர்களுக்கும் அதிகமானோர் ஊட்டச்சத்துக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் சாவின் பிடியில் இருக்கிறார்கள்” எனத் தெரிவித்தார். (ஐ)

## அகதிகளுடன் சென்ற படகு கடலில் மூழ்கி 75 பேர் பலி!

### லிபியா அருகே துயரம்

லிபியா அருகே மத்தியதரை கடலில் அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாதில் 75 பேர் உயிரிழந்தனர் என்று ஐ. நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

இத்தாலிக்கு அடைக்கலம் தேடி சென்று கொண்டிருந்த அந்த அகதிகளில் 15 பேரை மட்டும் மீனவர்கள் மீட்டு லிபியா அழைத்துச் சென்றனர். கடந்த வாரம் இந்த விபத்து இடம்பெற்றதாக ஐ. நா. அகதிகள் நல அமைப்பு ஞாயிற்றுக்கிழமை தகவல் வெளியிட்டுள்ளது.


லிபியாவைக் கடந்து சென்றுகொண்டிருந்தபோது படகு கவிழ்ந்து இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமாக மத்தியதரைக் கடல் வழியாக புலம்பெயரும் முயற்சிகளின்போது இந்த ஆண்டு இதுவரை 1,300 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனரென ஐ. நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

## 25 கார்களில் 80 கொள்ளையர்கள்; அமெரிக்காவில் பெரும் கொள்ளை!

சன்பிரான்சிஸ்கோ, நவ. 23

25 கார்களில் முகமூடி அணிந்து வந்த 80 கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி பெரும் கொள்ளையில் ஈடுபட்டனர். எனினும், இவர்கள் தப்பிச் செல்லும் போது மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் சன் பிரான்சிஸ்கோ நகரில், “நோர்ட்ஸ்ட்ரோம்“ என்ற பல்பொருள் அங்காடியிலேயே இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு 25 கார்களில் முகமூடி அணிந்த 80 கொள்ளையர்கள் அங்கு வந்தனர். கைகளில் ஆயுதங்களுடன் வந்தவர்கள், அங்காடிக்குள் நுழைந்து அனைத்துப் பொருட்களையும் கொள்ளையிட்டனர்.

கொள்ளையை தடுக்க முனைந்த இருவரை அவர்கள் தாக்கியதில் அவர்கள் காயமடைந்தனர். சில நிமிடங்களில் அந்தப் பகுதியை கொள்ளையடித்து விட்டு அவர்கள் தப்பிச் சென்றனர்.

எனினும், அவர்களில் மூவரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். அவர்களிடம் இருந்து துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

எனினும், கடந்த வியாழக்கிழமை இரவும் இது போன்றதொரு கொள்ளைச் சம்பவம் சன்பிரான்சிஸ்கோவின் யூனியன் சதுக்கம் பகுதியில் இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இசை கச்சேரியில் புதிய சாதனை!

காராகஸ், நவ. 23

வெனிசுலாவில் 8 ஆயிரத்து 573 இசைக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து நடத்திய இசைக் கச்சேரி, உலகின் மிகப் பெரிய இசைக் குழுவால் நடத்தப்பட்ட கச்சேரி என்ற சாதனையை படைத்துள்ளது. கின்னஸ் சாதனை புத்தகம் இந் தத் தகவலை சனிக்கிழமை தெரிவித்தது.

‘எல் சிஸ்டெமா’ என்றழைக்கப்படும் அந்த இசைக் குழு வில் 12 முதல் 77 வயது வரையிலானவர்கள் பங்கேற்று சாய் கோவ்ஸ்கியின் ‘ஸ்லாவோனிக் மார்ச்’ என்ற பாடலை ஐந்து நிமிடங்களுக்கு இசைத்து இந்த சாதனையைப் படைத்தனர்.

இதற்கு முன்னர், ரஷ்ய தேசிய கீதத்தை இசைத்து அந் நாட்டு இசைக் குழு ஒன்று நடத்திய கச்சேரிதான் மிகப் பெரிய குழு நடத்திய கச்சேரியாக கின்னஸ் சாதனைப் புத் தகத்தில் இடம்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)



# மே. இ. தீவுகளுடனான டெஸ்ட்; வலுவான நிலையில் இலங்கை!




காலி, நவ. 23

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வலுவான நிலையில் உள்ளது. இலங்கை அணி முதல் இனிங்ஸில் 386 ஓட்டங்களை எடுத்திருந்தது. பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி 113 ஓட்டங்களை எடுத்த நிலையில் 6 விக்கெட்களை இழந்து துடுப்பெடுத்தாடி வருகின்றது.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி நேற்றுமுன் தினம் காலியில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல்நாள் ஆட்டம் நிறைவடைந்தபோது 3 விக்கெட்கள் இழப்புக்கு 267 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தது. திமுத் கருணாரத்ன 132 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 56 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாம்நாளான நேற்று தொடர்ந்த ஆட்டத்தில் தனஞ்சய 61 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்த வந்த தினேஷ் சந்திமால் பொறுமையாக ஆட, மறுமுனையில் சதம் கடந்திருந்த திமுத் கருணாரத்ன 147 ஓட்டங்களை குவித்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மதிய நேர உணவு இடைவேளையை தொடர்ந்து மளமளவென்று விக்கெட்கள் சாய, 133.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 386 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் வந்தவர்களில் சந்திமால் மட்டுமே அதிகபட்சமாக 45 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சில் றோஸ்ரன் சேஸ் 5 விக்கெட்களையும், ஜொமெல் வாரிகன் 3 விக்கெட்களையும், கப்ரியால் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதன் தலைவர் கிராய்க் பிராத்வைற், பிளக்வூட் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் நிதானமாக ஆடிய போதும் பிளக்வூட் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்தவீரர்கள் வேகமாக விக்கெட்களை பறிகொடுத்தனர். பொன்னர் ஓர் ஓட்டத்துடன் விழ, பிராத்வைற் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த, ஹோப் 10, றோஸ்ரன் சேஸ் 2, ஜொமெல் வாரிகன் ஓர் ஓட்டங்களையே பெற்றனர்.

இரண்டாம் நாளான நேற்று ஆட்டம் முடிவடைந்தபோது மேற்கிந்தியத் தீவுகள் அணி 42 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்திருந்தது. இலங்கையின் பந்து வீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 3 விக்கெட்களையும், பிர வீன் ஜெயவிக்கிரம 2 விக்கெட்களையும், லசித் எம்புலுதெனிய ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். (ஐ)




# நியூசிலாந்துடனான ரி-20 தொடர்; முழுமையாக வென்றது இந்தியா!

கொல்கத்தா, நவ. 23

கொல்கத்தாவில் நடந்த மூன்றாவதும் இறுதியுமான இருபது -20 போட்டியில் இந்திய அணி 73 ஓட்டங்களால் நியூசிலாந்தை வீழ்த்தி தொடரை 3-0 முழுமையாகக் கைப்பற்றியது.

இந்த வெற்றி இருபது -20 போட்டிகளில் ரோஹித் ஷர்மா - ராகுல் டிராவிட் சகாப்தத்திற்கு சிறந்த தொடக்கத்தை வழங்கியுள்ளது. இதேநேரம் இருபது-20 போட்டியில் ஓட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் நியூசிலாந்துக்கு எதிராக இந்தியா பெற்ற மிகப்பெரிய வெற்றி வித்தியாசம் இதுவாகும்.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 187 ஓட்டங்களை பெற்றது.

இதில், ரோஹித் சர்மா 31 பந்துகளில் 56 ஓட்டங்களை எடுத்தார். அவருக்கு அடுத்தபடியாக இஷான் கிஷன் 29 ஓட்டங்களையும், ஸ்ரேயாஸ் ஐயர் 25 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

188 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, 17.2 ஓவர்களில் 111 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

மார்ட்டின் குப்தில் மாத்திரம் 36 பந்துகளில் 51 ஓட்டங்களை எடுத்தார். ஏனைய வீரர்கள் அனைவரும் சொதப்பலான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர்.

பந்து வீச்சில் அசத்திய அக்ஸர் பட்டேல் 3 விக்கெட்களையும், ஹர்ஷல் பட்டேல் 2 விக்கெட்டுகளையும், தீபக் சஹர், சாஹல் மற்றும் வெங்கடேஷ் ஐயர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா மூன்று போட்டிகள் கொண்ட இருபது -20 தொடரை 3:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. (ஐ)

# ஏ. ரி. பி. ரென்னிஸ் இறுதி; சம்பியனானார் ஸ்வெரேவ்

டுரின், நவ. 23

ஏ. ரி. பி. ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு இறுதியில் ஜேர்மனியின் ஸ்வெரேவ் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இறுதியில் ரஷ்யாவின் மெட்வெடோவை தோற்கடித்தார்.

இத்தாலியின் டுரின் நகரில், ஏ. ரி. பி. இறுதியாட்டம் ரென்னிஸ் நடந்தது.

இதன் ஒற்றையர் பிரிவு இறுதியில் ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், ரஷ்யாவின் டேனில் மெட்வெடேவ் மோதினர்.

முதல் செற்றை 6:4 எனக் கைப்பற்றிய ஸ்வெரேவ், இரண்டாவது செற்றையும் 6:4 என தன்வசப்படுத்தினார்.

ஒரு மணி நேரம், 15 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஸ்வெரேவ் 6:4, 6:4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் இரண்டாவது முறையாக கிண்ணத்தை வென்றார்.

ஏற்கனவே 2018இல் நடந்த இறுதியில் ஜொகோவிச்சை தோற்கடித்து முதன்முறையாக கிண் ணம் வென்றிருந்தார். (ஐ)



# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது

நுவரெலியா, நவ. 23

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகல தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரைப் பொகவந்தலாவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பொகவந்தலாவை பிரதேசத் தைச் சேர்ந்த 55 வயது நபரே இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# ஐந்து விபத்துக்களில் ஐவர் மரணம்!

கொழும்பு, நவ. 23

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற 5 விபத்துக்களில் ஐவர் மரணமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சென்று வடிகானொன்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநரும் மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த நபரும் தெனியாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மரணமடைந்தார். கோட்டபொல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

இரத்தினபுரி பெல்மடுல்ல வீதி, பாத்தகொட பிரதேசத்தில் லொறியொன்று மற்றுமொரு லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒரு லொறியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரே உயிரிழந்தார்.

இதேவேளை, மாத்தளை - கண்டி வீதி, வரக்காமுர பிரதேசத்தில் கண்டி நோக்கிப் பயணித்த வானொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து கொங்கிரீட் தூண் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த வானின் சாரதி, மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். வரக்காமுர பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரே உயிரிழந்தார்.

மாத்தறை, திஹகொட பொலிஸ் பிரிவு, ஹக்மன வீதி நாதுகல பிரதேசத்தில் மாத்தறை நோக்கிப் பயணித்த ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் பாதசாரி பெண்ணொருவர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி மற்றும் பாதசாரி பெண் ஆகியோர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது ஓட்டோ சாரதி மரணமடைந்தார். நாமின பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயது நபரே உயிரிழந்தார்.

கேகாலை, ருவன்வெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரக்காபொல கரவனெல்ல வீதியில் வரக்காபொல நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்று பாதசாரி பெண்ணொருவர் மீது மோதியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த பெண், கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். ருவன்வெல பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயது நபரே உயிரிழந்தார். (இ)

DAN CINE MARATHON

மாபெரும் குறும்படப் போட்டி

இது நமது திரைத்துறை கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்

உங்கள் அணியினருடன் போட்டியில் கலந்துகொள்ளத் தயாராகுங்கள்

Dan Cine Marathon குறும்படப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணிகள் இப்போதே உங்கள் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு :

075 313 2901, 075 313 2932, 076 921 3686

# பொருளாதார நெருக்கடிக்கு நாட்டை ஆட்சி செய்த அனைவருமே பொறுப்பு

## அமைச்சர் கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 23



**"நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசோ அல்லது கொரோனாத் தொற்றோ காரணமில்லை. 1955ஆம் ஆண்டில் இருந்து நாட்டை ஆட்சி செய்துவந்த அனைத்துக் கட்சிகளுமே இந்த பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பு."**

- இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நாடு பெரும் பிரச்னைக்கு முகம் கொடுத்துள்ளது. நாட்டில் பணம் இல்லை. டொலர் இல்லை என்பதை நாங்கள் வெளிப்படையாகத் தெரிவித்து வருகின்றோம். அவ்வாறு இல்லாமல் நாட்டில் அவ்வாறான பிரச்னை இல்லை. தேவையான அளவு பணம் இருப்பதாக நாங்கள் தெரிவித்து வந்தால் இந்தப் பிரச்னையில் இருந்து எமக்கு வெளியில் வரமுடியாது. அதனால்தான் கடந்த ஜூன் மாதம் ஆரம்பத்திலேயே நாட்டின் பொருளாதாரப் பிரச்னை தொடர்பாகத் தெரிவித்தேன்.

1955ஆம் ஆண்டில் இருந்து நாங்கள் சமர்ப்பித்த அனைத்து வரவு - செலவுத் திட்டங்களும் பற்றாக்குறை வரவு - செலவுத் திட்டங்களே. எமது வருமானத்தையும் பார்க்க செலவு அதிகம். அதனால் பற்றாக்குறையை நிரப்பிக்கொள்ளக் கடன் பெற்றோம். அவ்வாறு பெற்ற கடன்தான் இப்போது பாரிய பிரச்னையாகி இருக்கின்றது. அதனால் இந்தப் பிரச்னைக்கு 1955இல் இருந்து ஆட்சி செய்த அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

எமது அனைத்து தேவைகளுக்கும் வெளிநாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் நிலையே உள்ளது. பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினம் கொண்டாடுவதும் சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தேசியக் கொடியை அசைத்துக் கொண்டாடுவதாகும். அதனால் வெளிநாட்டு செலாவணி குறைவது என்பது வியப்பானது அல்ல.

கொரோனா காரணமாக இந்த பிரச்னை ஏற்படவில்லை. 2019இல் எமது பொருளாதார அபிவிருத்தி வேகம் 2 வீதத்துக்கு குறைந்துள்ளது. கடன் வீதம் 87வீதத்தால் அதிகரித்துள்ளது. அதுதான் பொருளாதார வீழ்ச்சிக்கான அடையாளம். இந்தப் பிரச்னை எப்போதாவது வெடிக்கவே இருந்தது. எனினும், கொரோனா காரணமாக விரைவாக வெடித்திருக்கின்றது.

நாட்டில் இவ்வாறு தேசிய பிரச்னை இருக்கும்போது நாங்கள் அதற்கு இணைந்து முகம்கொடுக்கவேண்டும். ஆனால், நாங்கள் கட்சி, இன, மத ரீதியாகப் பிரிந்து இருப்பது மாத்திரமல்லாது கொரோனாப் பிரச்னைக்கு முகம்கொடுத்து நாட்டைப் பாதுகாப்பது அனைத்து கட்சிகள், இனத்தவர்களின் பொறுப்பு. பாதிக்கப்பட்டிருப்பது எம் அனைவரினதும் நாடாகும்.

எமது நாடு அழிந்தால் நாங்கள் அனைவரும் அழிந்து விடுவோம். அதனால் தொற்று நிலைமையில் தங்களது அரசியலைக் கட்டியெழுப்புவதை விட தொற்று நிலைமையில் இருந்து நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்றே சிந்திக்கவேண்டும்.

கொரோனாவைப் பயன்படுத்தி அனைவரும் இணைந்து அரசைத் தோற்கடிப்பதற்கு பதிலாக அனைவரும் இணைந்து கொரோனாவைத் தோற்கடிப்பதற்கு இணைந்து செயல்பட வேண்டும். என்றாலும் எதிர்க்கட்சி கொரோனா நிலையையும் பொருட்படுத்தாது, மீண்டுமொரு கொரோனா அலையை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருவது கவலைக்குரியது" - என்றார். (இ)

# பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்புக்களில் பத்து பேர் கைது!

கொழும்பு, நவ. 23

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - கிராண்ட்பாஸ், முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 15 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு 14, ஜா - எல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு அலுபோமுல்ல, பாணந்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது 53 லீற்றர் மதுபானம், 2 ஆயிரத்து 124 லீற்றர் கோடா, இரு எரிவாயு அடுப்புகள், இரு எரிவாயு சிலிண்டர்கள், இரு செப்புத்தகடுகள் என்பவற்றுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அலுபோமுல்ல, பொல்கஸ்ஓவிட்ட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 32, 62 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இரண்டு மதுபான சுற்றிவளைப்புகளில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 308 லீற்றர் மதுபானம், ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகஸ்வெள, எரபதுகஸ்வெள பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரமின்றி இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கியுடன் ஓட்டோவில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 27, 65 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேட்டுவான பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஒரு கிராம் 486 மில்லிகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மாஎலிய பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, நவ. 23

கேகாலை, புளத்கொஹூப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிக்கொட பிரதேசத்தில், சந்தேகத்துக்கிடமான முறையில் மரணமடைந்த ஆண் ஒருவரின் சடலத்தை புளத்கொஹூப்பிட்டி பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஹிக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புளத்கொஹூப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

ஈழநாடு
Eelanadu

# கொரோனா எச்சரிக்கை வலயமாக மாறுகின்றது தென்கிழக்கு பல்கலை

## 37 மாணவர்களுக்குத் தொற்று

அம்பாறை, நவம்பர் 23

**தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 37 மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

**தொற்றுக்குள்ளான மாணவர்கள் அனைவரும் அட்டாளைச்சேனை கொரோனா இடைநிலை முகாமில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கடந்த மூன்று நாட்களாக கல்முனை பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 37 மாணவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் பல இடங்களில் கொரோனா நிலைமை அதிகரித் துள்ளது.

அனைவரும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மீண்டுமொரு பேராபத்து நிலைமை ஏற்பட இடமளிக்கக்கூடாது” - என்றார். (இ)

## பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் 11 பொலிஸாருக்கு கொரோனா

அம்பாறை, நவ. 23

பொத்துவில் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

கொரோனா நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு அவரால் நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். (இ)

## முல்லையில் கொரோனாவால் மேலும் இருவர் பரிதாப மரணம்

முல்லைத்தீவு, நவ. 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மேலும் இருவர் உயிரிழந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 44 வயதுடைய மாறா இலுப்பை, நெடுங்கேணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

சிறுநீராக நோயால் பாதிக்கப்பட்ட இவர் கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மரணமடைந்தார்.

இவரின் உடலம் கொரோனா விதிமுறைகளுக்கு அமைய எரியூட்டுவதற்காக நேற்று வவுனியா, பூந்தோட்டம் மின் தகன மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கூழாமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய முருகன் கோபால் என்பவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்

இவரின் உடலமும் எரியூட்டுவதற்காக வவுனியா, பூந்தோட்டம் மின் தகன மேடைக்கு நேரு எடுத்துச் செல்லப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் இதுவரை 55 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வீதிக்கு இறங்கிய விவசாயிகள்!

நுவரெலியா, நவ. 23

பெரும் போகத்துக்குத் தேவையான இரசாயன உரம் உள்ளிட்ட விவசாய பொருட்களை வழங்குமாறு கோரி நுவரெலியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. பிரதேச விவசாயிகளுடன் இணைந்து பௌத்த தேரர்களும் இந்த ஆர்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.

நுவரெலியா காமினி தேசிய பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்த பேரணி, பதுளை - நுவரெலியா பிரதான வீதியினூடாக நுவரெலியா தபால் நிலையத்துக்கு முன்னால் சென்றடைந்தது.

அந்த இடத்தில் இரண்டு மணித்தியாலங்களாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இரண்டாயிரம் பேர் வரையில் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசிடம் உரம் உள்ளிட்ட பொருட்களைக் கோரி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக நுவரெலியா, கந்தப்பளை, மீபிலிமான, நானு ஓயா ஆகிய நகரங்களில் உள்ள கடைகளும் மூடப்பட்டிருந்தன.

## கண்ணீர் அஞ்சலி

ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர்

**வ. ம. கானமயில்நாதன்**



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், பத்திரிகை சொந்தங்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் – ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஈழநாடு நிர்வாகத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 01 - 1941



இறப்பு 21 - 11 - 2021

**செல்லத்துரை இளையதம்பி**

யாழ். மாதகலைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இளையதம்பி நேற்றுமுன்தினம் ( 21-11-2021) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இளையதம்பி – பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி – சம்பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், புஷ்பராணி அவர்களின் அன்புக் கணவரும், பாஸ்கரன், யசோதினி, பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜி, சிவதாசன், தனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கணபதிப்பிள்ளை மற்றும் வசந்தராணி, உருத்திரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா, கந்தையா, சிவபாக்கியம், விஜயலட்சுமி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,பவீனா, மதுஷன், பவீஷா, பினுஷன், காவியா, ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**பாஸ்கரன் - மகன்**
**Mobile : +14165181335**

தகவல் :
**குடும்பத்தினர்**













இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-எங்கேயும் எப்போதும்,மீசைய முறுக்கு திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி படித்ததில் பிடித்தது-எழுத்தாளர் வேல்நந்தகுமார்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு